1270

# ஜகன்மோகினி

ஆசிரியை

வை. மு. கோதைநாயகி அம்மாள்

270



...மோகினி ஆபீஸ்
...28, தேரடித் தெரு
திருவல்லிக்கேணி, சென்னை

...ர் 13 இதழ்

3L
ஊ211,N22ம
N36.13.4.
182986.

## ஏஜெண்டுகள் தேவை.

ஒவ்வொரு ஊரிலும் எமது 'ஜகன்மோகினி' யை விற்பனை செய்ய செல்வாக்குள்ள ஏஜெண்டுகள் தேவை. மற்ற விவரங்களுக்கு உடனே எழுதவும்.


# ஜகன் மோகினி

ஆசிரியை : வை. மு. கோதைநாயகி அம்மாள்.

| | | |
|---|---|---|
| 13-வது ஆண்டு ஆரம்பம் | மாதாந்த நாவல் சஞ்சிகை. | ஜனவரி 1936 |

ஆங்கில மாதம் முதல் தேதியன்று வெளிவரும்.

எல்லா பத்திரிகை விற்போரிடமும் கிடைக்கும்.

| | | |
|---|---|---|
| வருஷ சந்தா ரூ. 1-8 | ஜீவிய சந்தா ரூ. 25 | தனிப்பிரதி அணு 2 |

## ஜீவிய சந்தா நேயர்களுக்கு இனம்.

இனிமேல் நமது நூலாசிரியையால் எழுதப்பட்டு. நம்மால் பிரசுரிக்கப் படும் எல்லா நாவல்களும் இனமாக அளிக்கப்படும்.

## வெளி நாட்டு சந்தா நேயர்களே !

தமிழ்ப் பத்திரிகைகளில் வெளி நாட்டினருக்காகச் சந்தாவை அதிக மாக்காத பத்திரிகை நமது மோகினி ஒன்று தான் என்பது நீங்கள் அறிந்த விஷயம். உள் நாட்டில் காலணு தபாற் செலவில் அனுப்பும் பத்திரிகையை வெளி நாட்டிற்கு அனுப்ப முக்காலணு ஆவதால் நமக்குச் செலவு அதிக மாயினும். தமிழ் மக்கள் யாவரும் ஒரே விலையில் நமது பத்திரிகையைப் படிக்க சௌகரிய மளிக்கவேண்டுமென்ற நோக்கத்துடன் சந்தாவை அதி கரிக்கவில்லை. நீங்கள் ஒவ்வொருவரும் உங்களாலியன்ற அளவு புதிய சந்தாதாரர்களைச் சேர்த்தனுப்பி உங்களுக்கு வேண்டிய இனம் புத்தகங்களை பெற்றுக்கொள்வதுடன் நமக்கு ஆதரவளிக்கக் கோருகிறேம்.

"ஜகன்மோகினி ஆபீஸ்" திருவல்லிக்கேணி.

# விசேஷ அறிவிப்பு

## நமது விளம்பர விகிதம்.

| | | | | |
|---|---|---|---|---|
| 1 பக்கத்துக்கு ஒரு முறை | ரூ. | 10 | 0 | 0 |
| ½ பக்கத்துக்கு ” | ” | 5 | 8 | 0 |
| ¼ பக்கத்துக்கு ” | ” | 3 | 0 | 0 |
| கடைசி பக்க உள்ளட்டைக்கு ஒரு முறை | ” | 10 | 0 | 0 |
| முதற்பக்க உள்ளட்டைக்கு ” | ” | 12 | 0 | 0 |

## விசேஷ விளம்பரங்கள்

| | | | | |
|---|---|---|---|---|
| சஞ்சிகையின் ஒவ்வொரு பக்கத்திலும் கதைக்குக் கீழ் 1 வரி விளம்பரச் செய்தி போட ஒரு முறை | ரூ. | 0 | 8 | 0 |
| ஒரே காலத்தில் 48 வரிகள் 1 சஞ்சிகையின் 1 வெளியீடு முழுவதிலும் போட ஒரு முறை | ” | 20 | 0 | 0 |
| கதை முடியும் அத்தியாயங்களின் இறுதியில் 1 பக்கத்தில் அநுமதிக்க ஒரு முறை | ” | 15 | 0 | 0 |

நீண்டகால விளம்பரங்களுக்கும், ஒப்பந்த விளம்பரங்களுக்கும் **தனிச் சலுகை காட்டப்படும். ஸினிமா, இன்ஷியூரன்ஸ்** போன்ற கம்பெனிகளுக்கு விசேஷ வசதிகளுடன் விளம்பரஞ் செய்வதோடு, முக்கியத்துவமும் பிரதான்யமும் கொடுக்கப்படும்.

மற்ற விவரங்களுக்கு நேரே விளம்பர மானேஜருக்கு எழுதித் தெரிந்து கொள்ளவும்.

| | | |
|---|---|---|
| **பங்கு 1**<br>நளினசேகரன்<br>வீரவஸந்தா<br>3 வைரங்கள்<br>படாடோபத்தின் பரிபவம்<br>பிச்சைக்காரக் குடும்பம் | **இனாமாக நாவல்கள் வேண்டுமா?** | **பங்கு 2**<br>பரிமளகேசவன்<br>உத்தமசீலன்<br>கதம்பமாலை<br>சுகந்தபுஷ்பம்<br>கோபாலரத்னம்<br>பத்தியே புதையல் |
| **பங்கு 3**<br>கௌரீமுகுந்தன்<br>ஸாரமதி<br>சோதனையின் கொடுமை | எத்தனை புதிய சந்தாதாரர்களைச் சேர்த்து முன்பணமனுப்புகிறீர்களோ, அத்தனாவது நம்பர் பங்கிலுள்ள புத்தகங்களில் | **பங்கு 4**<br>தியாகக்கொடி<br>நவநீதகிருஷ்ணன்<br>சாமளநாதன்<br>ருக்மிணீகாந்தான்<br>மங்களபாரதி |
| **பங்கு 5**<br>வைதேகி<br>பத்மசந்தரன்<br>ராதாமணி<br>காதலின் கனி<br>சாருலோசனை | **ஒன்று இனாம்** | மூன்று புதிய சந்தாதாரர்களைச் சேர்த்து முன் பணம் அனுப்புவோருக்கு ஒரு வருஷ சஞ்சிகை இனாம். |

182986

**“ஜகன்மோகினி” ஆபீஸ் திருவல்லிக்கேணி.**

ஸ்ரீமதி

# வை. மு. கோதைநாயகி அம்மாள்

26½ ரூபாய்க்கு 31 நாவல்கள்.

## எழுதிய நாவல்கள்.

"ஜகன்மோகினி" சந்தாதாரர்களுக்கு குறைந்த விலை

| | ரூ. | அ. | ரூ. | அ. |
|---|---|---|---|---|
| வைதேகி (2 பாகங்கள்) | 2 | 8 | 2 | 0 |
| ராதாமணி (2 பாகங்கள்) | 2 | 8 | 2 | 0 |
| சாருலோசனா (2 பாகங்கள்) | 2 | 8 | 2 | 0 |
| பத்மசுந்தரன் | 2 | 8 | 2 | 0 |
| காதலின் கனி | 2 | 8 | 2 | 0 |
| நவநீதக்ருஷ்ணன் | 2 | 0 | 1 | 12 |
| ருக்மிணீகாந்தன் | 2 | 0 | 1 | 12 |
| சாமளநாதன் | 2 | 0 | 1 | 12 |
| தியாகக்கொடி | 2 | 0 | 1 | 12 |
| மங்களபாரதி | 2 | 0 | 1 | 12 |
| சண்பகவிஜயம் | 1 | 12 | 1 | 8 |
| கௌரீமுகுந்தன் | 1 | 12 | 1 | 8 |
| ஸாரமதி | 1 | 12 | 1 | 8 |
| சோதனையின் கொடுமை | 1 | 8 | 1 | 4 |
| பரிமளகேசவன் | 1 | 4 | 1 | 0 |
| உத்தமசீலன் | 1 | 4 | 1 | 0 |
| சுகந்தபுஷ்பம் | 1 | 0 | 0 | 14 |
| கதம்பமாலை | 1 | 0 | 0 | 14 |
| கோபாலரத்னம் | 0 | 14 | 0 | 12 |
| புத்தியே புதையல் | 0 | 14 | 0 | 12 |
| பட்டமோ பட்டம் | 0 | 10 | 0 | 8 |
| நளினசேகரன் | 0 | 8 | 0 | 6 |
| வீரவஸந்தா | 0 | 8 | 0 | 6 |
| மூன்று வைரங்கள் | 0 | 8 | 0 | 6 |
| படாடோபத்தின் பரிபவம் | 0 | 8 | 0 | 6 |
| பிச்சைக்காரக் குடும்பம் | 0 | 8 | 0 | 6 |
| ஆனந்தஸாகர் | 0 | 8 | 0 | 6 |
| பக்ஷமாலிகா | 0 | 6 | | |
| ஜயஸஞ்சீவி | 0 | 4 | | |
| சுகுணபூஷணம் | 0 | 4 | | |
| அம்ருததாரா | 0 | 4 | | |

ரூ. 5-க்கு மேற்பட்டு ஒரே சமயத்தில் வாங்குபவர்கள் மொத்த விலையில் மூன்றிலொரு பங்கைக் குறைத்து மீதியை அனுப்பினால் தபால் செலவின்றி புத்தகங்களை அனுப்புகிறோம்.

"ஜகன்மோகினி" ஆபீஸ்,

26, தேரடித் தெரு, திருவல்லிக்கேணி, சென்னை.

# தென் இந்தியா மோட்டார் பாடசாலை

(1916-ஷ ஸ்தாபிக்கப்பட்டது)

## 3 மாதத்தில் மோட்டார் ஓட்டக் கற்றுக்கொள்ளலாம்

மோட்டார் வண்டிகளை ஓட்டவும், மெஷின்களைக் கழற்றவும் பூட்டவும், எலக்ட்ரிக் வேலைகளையும், மலைப்பிரதேசங்களில் கார்களை ஓட்டவும், வேறு பல சீர்திருத்தங்களைச் செய்யவும், கற்றுக்கொடுத்து தேர்ச்சியடைந்தபின் கவர்ன்மெண்டு லைசென்சும், பாடசாலை சர்டிபி கேட்டும் கொடுக்கப்படும். வாசிப்பு இல்லாதவர்களுக்கும் சுலபமாய் கற்றுக் கொடுக்கப்படும். தேர்ச்சி பெற்றால் ரூ. 35 முதல் 100-வரையிலும் பெறலாம்.

மோட்டார்கார் இயந்திர சாஸ்திரமும்

அதன் அநுபோக பயிற்சி முறையும் (50 படங்களுடன்)

விலை ரூ. 2. புஸ்தகம் வேண்டுபவர்கள் 2—6—0 முன்பணம் அனுப்பி பெற்றுக்கொள்ளவும். (தபால் செலவு 0—6—0) விபரத்துக்கு கீழ்க்கண்ட ஆபீஸ்களுக்கு எழுதவும்.

"ஜகன்மோகினி" ஆபீஸ், திருவல்லிக்கேணி.

தென் இந்தியா மோட்டார் எஞ்ஜினீரீங் ஒர்க்ஸ் அண்டு பாடசாலை

மயிலாப்பூர், P. O. சென்னை.

---

வாங்கிப் படியுங்கள்! **ஆடல் பாடல்** சினிமாப் பிரியர்க்கோர் நல்விருந்து!

ஓர் சிறந்த சினிமா சங்கீத வாரப்பத்திரிகை

சனிக்கிழமைதோறும் வெளிவருகின்றது.

சினிமா, சங்கீதம், நாடகம், நாட்டியம் முதலிய கலைகளைப்பற்றிய கட்டுரைகள், ஆடல் பாடல் பிரமுகர்களின் வாழ்க்கைக் குறிப்புகள், ஆடல் பாடல் செய்திகள், பேசும் படங்களைப் பற்றிய விமர்சனங்கள் முதலியனவும், மற்றும் 'பிரேமாவதி' என்ற தொடர் நவீனமும் கொண்டு நல்ல கிளேஸ் பேப்பரில் அழகிய படங்களுடன் பிரசுரமாகி வருகின்றது.

தனிப்பிரதி விலை அணா 0—0—6. வருடசந்தா ரூ. 2—0—0

எல்லா ஏஜெண்டுகளிடமும் கிடைக்கும்.

"ஆடல் பாடல்" முதல் மலர். (1935ம் ஆண்டு வெளி வந்த இதழ்களையும் ஆண்டு மலரையும் சேர்த்தது காலிகோ அட்டையுடன் பயிண்டு செய்யப்பட்ட அழகிய புத்தகம்) ஒவ்வொரு கலாரசிகனும், பெறவேண்டியதவசியம்.

விலை ரூபாய் 1—8—0 தபால்சிலவு பிரத்தியேகம்.

வேண்டுவோர் முன்பணமாக அணா 0—8—0 அனுப்புங்கள்.

"ஆடல் பாடல்" ஆபீஸ், 6 சுங்குராம செட்டி தெரு, சென்னை.

உலக அனுபவங்களைக் கண்டபடி எழுதுவதில் அன்றும் இன்றும் ஒப்புயர் விலாத ஆசிரியர்

## காலஞ்சென்ற ஸ்ரீமான் S. G. இராமானுஜலு நாயுடுகாரு

## எழுதிய அபூர்வ புத்தகங்கள்

| | ரூ. | அ. | | ரூ. | அ. |
|---|---|---|---|---|---|
| ஹம்ஸதேவி | 0 | 3 | பதினெட்டாம் பாஷை | 0 | 8 |
| கங்காதரன் | 0 | 3 | பன்னிரு மரகதங்களின் | | |
| சரஸ்வதி | 0 | 9 | மர்மம் | 3 | 0 |
| பாலிகா கல்பகம் | 0 | 6 | விசித்திர துப்பறியும் கண் | 3 | 0 |

ஸ்ரீமான். **J R.** ரங்கராஜுகாரால் எழுதப்பட்ட நிகரற்ற

## துப்பறியும் நாவல்கள்

| | ரூ. | அ. | | ரூ. | அ |
|---|---|---|---|---|---|
| இராஜாம்பாள் | 0 | 12 | இராஜேந்திரன் | 1 | 0 |
| சந்திரகாந்தா | 0 | 12 | வரதராஜன் (2 பாகம்) | 2 | 0 |
| மோஹன சுந்தரம் | 0 | 12 | விஜயராகவன் | 1 | 0 |
| ஆனந்த கிருஷ்ணன் | 0 | 12 | ஜெயரங்கன் | 1 | 8 |

## ஸ்ரீமான் வடுவூர் K. துரைசாமி ஐயங்கார்

எழுதிய நாவல்கள்

| | ரூ. | அ. | | ரூ. | அ. |
|---|---|---|---|---|---|
| பூர்ணசந்திரோதயம் | 7 | 8 | வஸந்தமல்லிகா | 1 | 8 |
| சௌந்தர கோகிலம் | 6 | 0 | இராஜேந்திரமோஹனு | 1 | 4 |
| மாயாவிநோதப் பரதேசி | 5 | 0 | வஸந்தகோகிலம் | 1 | 4 |
| திகம்பரசாமியார் பால்யலீலை | 5 | 0 | வித்யாசாகரம் | 1 | 4 |
| மதன கல்யாணி | 4 | 8 | முத்துலக்ஷ்மி | 1 | 4 |
| மிஸிஸ் லைலாமோஹினி | 3 | 0 | நீலலோசனி | 1 | 2 |
| மேனகா | 3 | 0 | கலியாணசுந்தரம் | 1 | 2 |
| கும்பகோணம் வக்கீல் | 3 | 0 | நங்கை மடவன்னம் | 1 | 2 |
| விலாசவதி | 3 | 0 | சிங்கார சூர்யோதயம் | 1 | 2 |
| மன்மதபுரியின் மூடுமந்திரம் | 2 | 12 | மிஸ்டர் பூச்சாண்டி எம்மே | 1 | 2 |
| கனகாம்புஜம் | 2 | 12 | டாக்டர் சோணாசலம் | 1 | 2 |
| பாலாமணி | 2 | 8 | சோமசுந்தரம் | 1 | 2 |
| தில்லைநாயகி | 2 | 4 | பச்சைக்காளி | 1 | 2 |
| துரைக்கண்ணம்மாள் | 2 | 4 | சமயசஞ்சீவி | 1 | 2 |
| சதானந்தபோதகசாமியார் | 2 | 4 | சொக்கன் செட்டி | 1 | 2 |
| பன்னியூர் படாடோபசர்மா | 2 | 4 | பூஞ்சோலையம்மாள் | 1 | 2 |
| திருபுரசுந்தரி | 2 | 0 | மாயாசுந்தரி | 0 | 12 |
| லக்ஷ்மீகாந்தம் | 2 | 0 | திவான் லொடபடசிங் | 0 | 12 |

## 15-வது அதிகாரம்

### மாயா ஜாலத்தில் மயங்கிய பேய்கள்

காதலர்களிருவரும் கூடும் காலம் வருமா வென்று எதிர்பார்த்திருக்கையில், அவர்களே வியக்கும் வண்ணம் கூடிக்குலாவிக்களிக்கும் சந்தர்ப்பத்தைக் கடவுள் அளித்தும் மனநிம்மதியை யளிக்காது முதலில் சுதர்சனம் வந்து பெருத்த குழப்பத்தை உண்டாக்கிவிட்டுச் சென்ற பின்னர் இனியாவது நிச்சிந்தையாக இருக்கலாம் என்று நினைப்பதற்குள் ஒரு பேயுடன் பிரமராக்ஷஸியும் வந்ததுபோல சுதர்சனமும் அவர் மனைவியும் ஜோடியாக வந்ததானது எல்லோருடைய உயிரையும் ஒரு குலுக்கு குலுக்கிவிட்டது.

பத்மநாபன் ஜானகியின் பரிதாபத்தைக் கண்டு என்ன சொல்வான் பாவம்! "ஜானகி! நீ பயப்படாதே; தலைக்கு மிஞ்சிய ஆக்கினை இல்லை. 'என் தலையைச் சீவி விடுவதாயிருப்பினும் நான் உன்னை விட்டுப் பிரியமாட்டேன், மன்னி இச்சமயமும் தகுந்த சாக்குகள் கூறி நம்மைக் காப்பாற்றுவார்கள். நாம் இவ்வறையைவிட்டு வெளியே போகவேண்டாம். என்ன நடக்கின்றதோ பார்க்கலாம். நீ கண்ணீர் விடாதே" என்றான்.

அதே சமயம் வீதியில் அவன் தாயார் சற்று அழுத்தந் திருத்தத்துடன் "ஆமாம் முதலில் பையனுக்குக் கல்யாணத்தைச் செய்துவிட்டு அந்த மண்டை கொழுப்புப் பிடித்த ருக்மிணி இருக்கிறாளே, அவளையும் அவள் பெண்ணையும் நன்றாகக் கதற வைக்கவேண்டும். தலைகாட்ட முடியாமல் செய்யவேண்டும். நாத்த நெய்யில் பக்ஷணத்தைச் செய்து நாலுபேர் முன்னிலையில் எனக்குக் கொடுத்து என்னை அவமானப்படுத்திய வயிற்றெரிச்சலை நான் மறப்பேனா!

எனக்கு மட்டப்புடவையை வாங்கிக்கொடுத்து அவமானப்படுத்தியது என் மனத்தைவிட்டுப் போகுமா!...ஆகட்டும்...என்று உறுமியவாறு "சுகந்தா! சுகந்தா!" என்று மீண்டும் கதவை பலமாக இடித்தாள்.

முன்போலவே நாய் தடபுடலாகக் குரைக்க வாரம்பித்தது. சுகந்தா எழுந்து கதவருகில் வந்து "ஜானகி! நீங்களிருவரும் உள்ளேயே இருங்கள். வெளியில் வரவேண்டாம். நான் பேசிக்கொள்கிறேன்" என்று கூறி வீதிப்பக்கம் வந்துகதவைத் திறந்தாள். நாய் விடாமல் குரைப்பதை சுகந்தா அடக்கவே இல்லை. "மாமீ! வாருங்கள். இந்த ஊருக்கு வந்தால் நம்ம குடிசை இருப்பதை மறந்துபோய் வேறு வீட்டிற்குத் தான் செல்வதா! இங்கேயே நேரில் வந்திருக்கலாகாதா?" என்றாள். நாயோ விட்டபாடில்லை.

சுகந்தா அவர்கள் பதில் சொல்வதற்குள் நாயை நோக்கி "சே! சனியனே! வீட்டிற்கு ஒரு ஆள் வருவதற்கு யோக்யதை இல்லை. இருடா!...மாமீ! இது புதியதாக ராஜபாளையத்திலிருந்து வரவழைத்தோம். வந்து 15-தினங்கள் தானாகின்றன. வீட்டில் ஒருவரையும் காணவிடேன் என்கிறது. உங்கள் பிள்ளை வந்தபோது மூன்று நாள் விடாது குரைத்துக்கொண்டே இருந்ததால் அக்கம் பக்கம் உள்ளவர்கள் பெரிதாக கோபித்துக்கொண்டு இரவு முற்றும் இப்படிக் கத்தினால் எங்களுக்குத் தலைவேதனையாக விருக்கிறது. தூக்கங் கெட்டு தேக அசுகம் உண்டாகிறது. நாயை அடக்குங்கள் இல்லையேல், நாங்கள் போலீஸாரிடம் கூறி நாயை அப்புறப்படுத்திவிடுவோம் என்று நோட்டீஸ் விட்டுவிட்டார்கள்.

நாயைவிட மனமில்லை. எதிர்வீட்டில் என் தம்பி ஓர் அறை வைத்துக்கொண்டிருக்கிறான். அந்த அறையில் தான் பத்மநாபர் இருந்தார். இப்போது ஊருக்குப் போயிருப்பதால் அவ்வறை பூட்டி இருக்கிறது. நாம் மூவரும் அங்கேயே போவோம். பக்கத்து வீட்டுக்காரன் சண்டைக்கு வந்துவிடுவான். பொல்லாத நாய் சில சமயம் கடித்தும் விடுகிறது." என்று சுகந்தா கூறி முடிப்பதற்குள் செண்பகம்மாள் "ஐயோ! யம்மாடி போதும் போதும். நாய்

கடித்துவிட்டு நான்பட்ட கஷ்டமும் நீலகிரி குளிரில் அவஸ்தைப் பட்டதும் இப்போது நினைத்தாலும் பயமாகவிருக்கிறது...எதிர்வீட் டிற்கே போகலாம் வாடியம்மா...ஏதோ கல்யாண விஷயமாக நீ சொல்லியனுப்பியதைக் கேட்டதும் அங்கு இருக்கை கொள்ள வில்லை. அதற்காக இந்த பாதிராத்திரி வேளையில் ஓடிவந்தேன். காலையில் பேசிக்கொண்டால் போகிறது. நீயும் கண் விழிக்கவேண் டாம். எதிர் வீட்டு சாவி எங்கே?'' என்றாள்.

இதைக்கேட்ட சுகந்தத்திற்கு உண்டான சந்தோஷத்திற்கு எல்லையே இல்லை. பழம் நழுவிப் பாலில் விழுந்ததுபோலாயிற்று. உள்ளிருந்து இவைகளை கவனிக்கும் தம்பதிகளுக்கு அதுவும் நழுவி வாயில் விழுந்ததுபோலாகிவிட்டது. சுகந்தாவின் சமயோசித புத்தி யைக் கண்டு வியக்காமலிருக்கமுடியுமா! எல்லாம் கடவுளின் செயல் என்று மனமாற மகிழ்ந்தார்கள்.

சுகந்தா சாவியும், ஒரு விளக்கும், பாய் தலையணைகளும் தூக் கிக்கொண்டு எதிர்வீட்டிற்குச் சென்று அவ்வறையில் அவர்களுக்கு வசதி செய்து கொடுத்துவிட்டு " மாமி! நீங்கள் இவ்வளவுதூரம் வந்த தானது நான் செய்த பாக்கியந்தான் '' என்றாள். சண்பகம்மாளும் வெகு சந்தோஷத்துடன் "இந்த தரமாவது உன்னைப்போன்று ஒரு மருமகள் எனக்குக் கிடைத்தால் போதும் அதுதான் நான் வேண்டு வது '' என்றாள்.

சுகந் :—என்ன மாமீ! என்னைப்போல் ஏழையா வேண்டும். என்னைப்போல் வருவதானால் பைசாவுக்கு வழி இருக்காதே.

சண் :—இல்லேடி யம்மா! உன்னைப்போல குணவதியாக வேண்டும் என்றேன். சரி! மணி 12-அடித்துவிட்டது. காலையில் பேசிக்கொள்வோம். நீ போய் படுத்துக்கொள்ளு-என்றாள்.

இதுதான் சமயம் என்று எண்ணி சுகந்தா வீட்டிற்கு வந்து கதவைத் தாளிட்டுக்கொண்டு உள்ளே வந்தாள். ரங்கநாதனுக்கு கூறத் திறமற்ற வியப்பு உண்டாகியது. சுகந்தாவுக்கு சமய சஞ்சீவி போன்ற இத்தனை சாதுர்யமான குணமும் அபாரசக்தியும்

இருப்பதை இன்றே அறிந்தானுகையினுல் அவன் மனம் பொங்கி பூரித்தது. இத்தகைய உத்தம ரத்தினத்தை சித்தமுவந்து தனக்கு அருளிய கடவுளை வணங்கினுன்.

உள்ளிருக்கும் தம்பதிகள் இம்முறையும் தம்மைக் காப்பாற்றியதற்குமனமாற மகிழ்ந்து சுகந்தாவை மெச்சினுர்கள். இவர்கள் எங்கே வெளியே வந்துவிடுகிறுர்களோ என்கிற எண்ணத்தினுல் சுகந்தா "ஜானகி! சரியாக 5-மணிக்கு அலாரத்தை வைத்துக் கொண்டு தூங்கு" என்று முன்னதாக எச்சரித்தாள்.

ஜானகி:—நாதா! நாம் ஒன்று நினைத்தோம். அது வேருென்ருக முடிந்தது. தினம் சந்தித்து மகிழ எண்ணியதற்கு இன்றே சந்திப்பில் மண் விழுந்துவிடும்படியாயிற்று. இவ்விருவரும் வந்துவிட்டார்கள். நான் எப்படி இனிமேல் பார்ப்பது. என்ன செய்வேன்?

பத்ம:—கண்மணீ! இத்தனை பயங்கரமான ஆபத்தில் காப்பாற்றிய கடவுள் இனியும் வழி செய்யாமலிருப்பாரா? ஆகையினுல் கவலையே படாதே! நான் ஏதாவதொரு சாக்கை வைத்துக்கொண்டு கட்டாயம் உன்னை வந்து காண்கிறேன். அப்படி ஏதாவதொரு தடையினுல் தவறுமாயின் வித்யாசமாக நினைக்காதே! எப்படியும் நான் இனி உன்னை விடமாட்டேன். எதற்கும் அஞ்சாதே! ஆனுல் கடிதம் மட்டும் எழுதாதே! நானும் எழுதாமல் அவர்களுக்கு இஷ்டப்படியே நடந்துகொண்டு அவர்களைச் சரிப்படுத்திவிடுகிறேன்." என்று தைரியங் கூறித் தேற்றினுன்.

இரவு முற்றும் காதலர்கள் கண்கள் சற்றும் அயரவில்லை. 5-மணிக்கு அலாரமடித்ததும் ஜானகி தன் கணவனைப் பிரிய மனமின்றி விடைபெற்றுப் பிரிந்துவந்தாள். சுகந்தம் பாட்டியையும் எழுப்பி இவ்விருவரையும் ஓர் வண்டியில் ஏற்றி வீட்டிற்கு அனுப்பி விட்டாள்.

இரவு முற்றும் தூக்கம் பிடிக்காமல் இதே பேச்சாகப் பேசிக்கொண்டு புரண்டுகொண்டிருந்த சுதர்சனமும் சண்பகமும் 5-மணிக்கு முன்பே எழுந்து சுகந்தா எப்போது கதவைத்திறப்

பாள் என்று எதிர்வீட்டுத் திண்ணைமீதே உட்கார்ந்து கவனித்துக் கொண்டிருந்தார்கள்.

சுகந்தாவின் வீட்டு வாசலில் வேலைக்காரி வண்டியைக்கொண்டு நிறுத்தியதையும் உடனே கிழவியும் ஜானகியும் வந்து ஏறிக் கொண்டதையும் பார்த்துக்கொண்டிருந்த சண்பகத்திற்கு அப் போது இருட்டு கருக்கலாய் இருந்தபடியால் ஆள் விவரம் தெரியா மல் "ஏண்டி சுகந்தம்! யாரு ஊருக்குப் போகிறார்கள். ?" என்று கேட்டுக்கொண்டே எழுந்துவருவதை யறிந்த சுகந்தா வெகு விரை வில் அவர்களை வண்டியில் ஏற்றிவிட்டு வண்டிக்காரனை "சீக்கிரம் ஓட்டு. உம் உம்" என்று துரத்தினாள். சண்பகம்மாள் வண்டி யருகில் வந்து வண்டியை எட்டிப் பார்ப்பதற்குள் வண்டி நகர்ந்து விட்டது. "அம்மா சுகந்தம்! நான் வரேண்டியம்மா! நீ மத்தியானம் வா! என்னமோ! இந்த குழந்தைக்கு நீதான் திக்கு" என்றாள் கிழவி.

இந்த குரலைக் கேட்டதும் சண்பகம் அலறினாள். இதற்குள் வண்டி நகர்ந்து தெருக்கோடியை அடைந்துவிட்டது. சண்பகம் ஆத்திரத்துடன் "ஏண்டீ சுகந்தா! இந்த வண்டிக்குள்ளிருந்து பேசிய மொட்டைச்சியின் குரலைப் பார்த்தால் அந்த சித்திராங்கி ருக் மணியின் மாமியார் போலவிருக்கிறதே. ஐயோ! அந்த முண்டே இங்கே எங்கேடீ வந்தா! அந்தப்பெண் அவள் பேத்தி கெட்டுப் போன சிறுக்கியா என்னடீ?" என்று பதறியவண்ணம் கேட்டாள்.

சுகந்தா ஒன்றுமே அறியாதவள்போல "என்ன மாமீ! இவர் களை உங்களுக்குத் தெரியுமா என்ன? நாங்கள் குண்டூரில் வேலையா யிருக்கையில் இவர்கள் வீட்டில் தான் குடி இருந்தோம். இந்தப் பாட்டி வெகு நல்லவள். இவளுக்கு ஒரே பிள்ளைதான். வாஸு தேவ ராவ் என்றால் குண்டூரில் அறியாதவர்களில்லை. அவர்கள் ஜாதியில் மாத்வர்களாக விருந்தாலும் என்னிடம் அத்யந்த ப்ரீதி யுண்டு. இந்த பக்கம் வந்தால் இங்கு ஒரு நாளாவது தங்காமல் போகமாட்டார்கள். கங்காபாய் என்று இந்த பாட்டிக்குப் பேரு. இவள் மருமகள் பேரு துளஸிபாயல்லவா! நீங்கள் ருக்மணி என் கிறீர்களே....

என்று கூறி முடிப்பதற்குள் சண்பகம்மாள் அப்போதுதான் பயந்தெளிந்து பெருமூச்சு விட்டுக்கொண்டு "அடியம்மா! நான் குரலைக்கேட்டதும் பயந்துவிட்டேண்டீ! அந்த சம்மந்திப் பீடைகள் வீட்டுக் கிழட்டுப் பிணந்தான் இது; ஜானகிதான் அவள் என்று நடையைக்கண்டு மலைத்துவிட்டேன். இவர்கள் மாத்வர்களா...சரி தான். ஐயோ பாவம்! உன் தங்கமான குணத்திற்கு யார்தான் உன்னை மறப்பார்களடீ! பெண் என்றாலும் பெண்ணு நீ...என்று தோத்திரம் செய்ய வாரம்பித்துவிட்டாள்.

இவர்கள் எங்கே கூட வந்துவிடுகிறார்களோவென்ற பயத்தினால் சுகந்தா "மாமீ! இந்த வீட்டிலேயே ஜலவசதி இருக்கிறது. பல்லைத் தேய்த்துக்கொள்ளுங்கள். நான் இந்த நாய்களை புறக்கடைத் தோட்டத்தில் கட்டிவிட்டு வருகிறேன்." என்று முதலிலேயே ஜாக்ரதையாகக் கூறி அனுப்பிவிட்டு வீட்டுக்குள் வந்து தன் கணவனையும் பத்மநாபனையும் கிளப்பி அவர்கள் நடந்துகொள்ளவேண்டிய விஷயங்களை எல்லாம் கூறிவிட்டு அவர்களையும் வெளியே யனுப்பி விட்டாள்.

எதிர்வீட்டிலிருப்போர்கள் குழாயண்டை சென்றுவிட்டதால் இவர்களை கவனிக்கமுடியாது போய்விட்டது. இவர்களை வெளியே அனுப்பிய பிறகு சுகந்தா காப்பிக்குத் தயார் செய்துவிட்டு இவர்களை அழைத்தாள். இருவரும் வந்து அப்பாடாவென்று விசுப் பலகையில் உட்கார்ந்தார்கள். அப்போதுதான் நன்றாகப் பொழுது விடிய வாரம்பித்தது.

சுகந்தா காப்பி பலகாரம் தயார்செய்து இரு தெய்வங்களுக்கும் படைத்தாள். இருவரும் நன்றாக மூக்குமட்டும் உண்டு ஏப்பம் விட்டுப் பின் கல்யாண விஷயமாகவே பேசிக்கொண்டிருந்தார்கள். சுகந்தா வீண் வம்புக்கு இடங்கொடாமல் சமயல் செய்யப் போய்விட்டாள். இருவரும் ரங்கனும் பத்மநாபனும் வரும் நேரத்தையே எதிர்நோக்கிக் கொட்டாவி விட்டுக்கொண்டிருந்தார்கள்.

8 மணி சுமாருக்கு ஊரிலிருந்து வருபவர்கள் போன்று வெகு

சந்தோஷத்துடனும் சுறுசுறுப்பான உத்ஸாகத்துடனும் வீதியிலிருந்து உரத்த குரலில் இவர்கள் காதில்படும்படியாக "அடாடா! அழகு என்றால் அந்தப்பெண் தாண்டா அழகு என்ன பணம்... என்ன குணம்...என்று கூறிக்கொண்டே வந்தார்கள். தாழ்வாரத்தில் உட்கார்ந்திருப்பவர்களை அப்போதுதான் கண்டு வியந்தவர்கள் போல நடித்து" இதென்ன ஆச்சரியம்! நீங்கள் எப்போது வந்தீர்கள்? என்று கேட்டார்கள்.

இவர்கள் கூறிக்கொண்ட வார்த்தையைக் கேட்டு மதிமயங்கிய தம்பதிகள் "வாடாப்பா ரங்கா! நேற்று ராத்திரி வந்தோம். உன் மனைவிமூலமாக விஷயங்களை யறிந்து பேரானந்தமடைந்தவாறு உங்கள் வரவை எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறோம். சிநேகிதர்கள் என்றால் நீங்களல்லவோ உண்மை சிநேகிதர்கள். போன விஷயம் காயா பழமா?" என்று வெகு ஆவலுடன் கேட்டார்கள்.

ரங்கநாதன் "அடாடா! நான் சென்ற காரியங் கூடவா காயாவது? நல்ல பழுத்த பழம் பழத்தைப் பறித்துப் புசிக்க வேண்டியதுதான் இனி பாக்கி...ஆமாம். நீங்கள் இங்கு வந்து விட்டீர்களே! நான் அவர்களை இன்று அல்லது நாளையாவது போய் நேரில் சகலமும் பேசிக்கொள்ளுங்கள் என்று சொல்லி இருக்கிறேன். அங்கு சென்று ஒருவரும் இல்லாது திரும்பிப் போய்விடப் போகிறார்களே! என்று திடுக்கிட்டதுபோலக் கூறினான்.

சண்ப :—அப்படியா! ஆனால் இப்போதே வண்டி இருக்கிறதா பாரு. நாங்கள் போய்விடுகிறோம். நாங்கள் விவாகத்திற்காக வன்றோ வந்திருக்கிறோம். அந்த வேலையைக் கவனிப்பதை விட்டு விட்டு என்னசெய்யவேண்டும்? ஏண்டா பத்மநாபா! நீயும் கிளம்பு. இத்தனை நாள் இருந்ததுபோதும். உன்னைப்பிரிந்திருக்க முடியவில்லை. என்ன உங்களைத்தான். வண்டி எத்தனை மணிக்கு?" என்றாள்.

சுதர்சன் :—11-மணிக்கு வண்டி ; இப்போது ஒன்பதுதான் ஆகிறது. ஏண்டா! ஜாதகங்கள் வரதக்ஷிணை போக்குவரத்து எல்லாம் எப்படி?

182986.

ரங்க :—(சுகந்தாவை நோக்கி) என்ன சுகந்தா! நீ ஒன்றும் விஷயங்கள் சொல்லவே இல்லையா?...

சுதர் :—ஆகா! சுகந்தா எல்லாம் சொல்லிவிட்டாள். அதற் கவர்கள் சம்மதித்தார்களா, ஜாதகம் சரியாகிவிட்டதா என்று கேட்டேன்.

ரங்க :—அதற்காக பயப்படவே வேண்டாம். ஜாதகம் உண் மையிலேயே பொருந்திவிட்டது. பெண்ணென்னமோ சற்று குரூபிதான். ஆனால் பணந்தான் ப்ரதானம். பையனுக்குப் பிடித்து விட்டது. பெண்ணும் ஒரே பிடிவாதமாக இவனையே தான் மணப் பேன் என்று கூறிவிட்டாள். தகப்பனார் நாம் இழுத்த இடமெல் லாம் வருவார். தங்கக்கம்பி. உலகத்தில் அவரைப்போலல்லவா இருக்கவேண்டும். என்று எண்ணினேன். சகல ஏற்பாடும் முடிந்து விட்டார்போலத்தான். இன்றுவது நாளையாவது 10000 ரூபாய் ரொக்கமாகக் கொண்டுவந்து உங்களிடமே தருகிறார்களாம். எங்க ளிடம் கூட கொடுக்கத் தயாராக விருந்தார்கள். நாங்கள்தான் உங்களிடம் கொடுக்கச் சொன்னோம்.

இதைக்கேட்டதும் தம்பதிகளிருவருடைய வாயிலும் ஜலம் ஊறியது. ஒருவரையொருவர் பார்த்துக்கொண்டார்கள். ரங்க நாதனையும் சுகந்தாவையும் மாறி மாறிக் கொண்டாடிவிட்டு வெகு பறக்கப்பறக்க ஸ்நானம் செய்துவிட்டு வரதக்ஷிணை தெய்வத்தையே எண்ணி அதையே வணங்கிப் பின்னர் போஜனத்தை முடித்துக் கொண்டு ரயிலுக்குப் புறப்பட்டுவிட்டார்கள்.

பத்மநாபனும் எதும் தடை கூறாது புறப்பட்டான். எல்லோ ரும் சுகந்தாவிடமும் ரங்கனிடமும் சொல்லிக்கொண்டு பிரயாண மாகி ஸ்டேஷனையடைந்தார்கள். ரயில் வருவதற்கும் இவர்கள் சேருவதற்கும் சரியாகவிருந்தது. ரயிலில் தன் பேற்றோர்கள் ஏறிய உடனே பத்மநாபன் திடுக்கிட்டவனாய், “அம்மா! அம்மா! என் பணப்பையையும் கைக் கடியாரத்தையும் குளிக்கும் அறையில் வைத்து மறந்துவிட்டேன். நீங்கள் செல்லுங்கள். நான் அடுத்த

வண்டியிலாவது நாளேக்காவது வந்து சேருகிறேன். சாமான்கள் பத்ரம்'' என்ருன்.

இதற்குள் முதல் மணியும் அடித்துவிட்டது. என்னடா இது? நாளே சம்மந்திகள் வந்தால் என்னடா சொல்வது. நீயும் கூட இருக்கவேண்டாமா!'' என்ருள். பத்மநாபன் "என்னம்மா செய்வது? பணத்தையும் 100 ரூபாய் கடியாரத்தையும் சங்கிலியையும் தோற்றுவிடுவதா! நாளேக்குள் வந்து விடுவேன். பயப்படாதே'' என்ருன். இதற்குள் இரண்டாவது மணி யடித்தது. வண்டி கிளம்பி ஊதிக்கொண்டேபோய்விட்டது.

பத்மநாபனுக்குள்ள சந்தோஷத்திற்கு எல்லேயே இல்லே. இதுபரியந்தம் ரவிலடிக்கு வந்த ஜோடே தெரியாமல் ரகஸியமாக ஒரு மரத்தடியில் நின்றுகொண்டிருந்த ரங்கன் கபகபவென்று நகைத்துக்கொண்டே வெளியில் வந்து பத்மநாபனேத் தட்டிக் கொடுத்து "பேஷ்! பத்மநாபா! என்னவிருந்தாலும் தந்திரத்தில் சுகந்தா மிகத் தேர்ந்தவளாக ஆய்விட்டாள். தமாஷ் நேற்று இரவு முதல் எப்படி இருக்கிறது பார்த்தாயா! சிரித்துச் சிரித்து வயிறு வெடித்துவிட்டது. நல்ல நாடகமப்பா! நாம் சுகந்தா ஆட்டி வைக்கும் பொம்மைகளாகிவிட்டோம்'' என்று பேசிக்கொண்டே வீடு வந்து சேர்ந்தார்கள்.

சுகந்தாவும் சேர்ந்துகொண்டு சிரித்துச் சிரித்து மூச்சுத் திணறிவிட்டது. "அப்பா! ஒரு பெரிய கண்டத்தினின்றும் தப்பினேன். என்ன ரயில் புறப்பட்டுச் சென்றுவிட்டதா! மீண்டும் திரும்பி வந்துவிடுகிருளோ? பயமாகவிருக்கிறது.'' என்று நகைத்தாள் சுகந்தா.

"மன்னி! பயப்படவேண்டாம். ரயில் இன்னேரம் அடுத்த ஊருக்குக் கூட போயிருக்கும். எல்லாம் தங்களுடைய மாயா வலே வீச்சின் வல்லமையல்லவா! மாயவலேயில் அப்பிசாசுகள் கூட மயங்கிவிட்டனவே!'' என்ருன் பத்மநாபன்.

சுகந் :—அப்பாடா! இன்றைக்காவது ஆபத்துக்கள் இல்லாமல் சந்தோஷமாக இருக்கலாம். ஜானகி! இனி வெளியே வா!

என்று அழைத்தாள். ஜானகியும் கலகலவென்று நகைத்துக் கொண்டு வெளியில் வந்தாள். ஜானகியைக் கண்ட இருவருக்கும் அதிசயமாகிவிட்டது. "இதற்குள் எப்படி அழைத்து வந்துவிட்டாய்?" என்றான் ரங்கன்.

சுகந் :—எப்படியும் அவர்கள் போவதும் இவர் திரும்புவதும் தெரியுமாதலால் நானே அவர்கள் வீட்டிற்குச் சென்று இன்னும் நீங்கள் வரவில்லை என்று கூறிவிட்டு எனக்குத் துணைக்காக அழைத்துவந்தேன். இரவு பாட்டி வருவாள்.—என்றாள்.

பிறகு நால்வரும் வெகு சந்தோஷமாகச் சாப்பிட்டு தாம்பூலந் தரித்துக்கொண்டார்கள். ரங்கன் ஆபீஸுக்குப் போய்விட்டான். காதலர்களிருவரும் கடவுள் கிருபையினால் மீண்டும் வெகு இன்பமான சந்திப்பின் சந்தோஷத்தில் மூழ்கினார்கள்.

பத்மநாபன் ஊருக்குப்போவதை அன்றும் மறுதினமும் அறவே மறந்தான். ஜானகியுடன் வெகு ஆநந்தமாகப் பொழுதைப் போக்கினான். அவன் பெற்றோர்களோ ஊர்போய்ச்சேர்ந்த நிமிடம் முதல் புதிய சம்மந்தியின் வரவையும், 10000 ரூபாயின் வரவையும், பத்மநாபனின் வரவையும் வெகு ஆவலுடன் எதிர் நோக்கி எட்டிப்பார்த்துக் கொட்டாவி விட்டுக்கொண்டிருக்கிறார்கள். பத்மநாபன் அன்றும் வரவில்லை, மறுதினமும் வரவில்லை. சம்மந்திகளும் வராததால் மாயவலையில் மயக்குண்டிருப்பினும் அபாரமான குழப்பமும் சந்தேகமும் அடைந்து தத்தளிக்கின்றார்கள்.

உங்கள் மனத்தைக் கவர்ந்து மிக்க ஸ்வாரஸ்யத்தையளிக்கும் "பிச்சைக்காரக் குடும்பம்" என்ற அருமையான ஒப்புயர்வற்ற நாவலைப் படித்திருக்கின்றீர்களா?

விலை அணா எட்டே.

## 16-வது அதிகாரம்

### மனோதிட மாட்சி வினோதக் காட்சி

உலகத்தில் மக்கள் தம் வாழ்க்கையில் ஒரு விஷயத்தைப்பற்றி அறியாமலிருக்கும் வரையில் அதைப்பற்றி சற்றும் நினைப்பதே இல்லை. விஷயத்தை நன்கறிந்து அதன் உணர்ச்சியைத் தானே அனுபவிக்க நேர்ந்துவிட்டால் அது இன்பமாயினும் துன்பமாயினும் பெரிய மலைபோன்று தோன்றி வதைத்து அதே பித்தமாகச் செய்துவிடுவது சகஜமல்லவா ?

அச்சுதன் இளம் வயதுடைய வீர வாலிபன். நன்ருகக் கல்வியறிவு பெற்றவன். இதுகாறும் தான் கவனியாதிருந்துவிட்ட இவ்வரதக்ஷிணையின் கொடிய சர்ப்பம் அவன் கண்முன்பு சீறி படமெடுத்தாடி பல குடும்பங்களையும் பல பெண்களையும் கடித்துப் பலி வாங்குவது போன்று தோன்றுகின்றது. கடற் கரையில் படுத்திருந்தவனுக்கு நேரம் போவதே தெரியவில்லை.

தாரகனும் இன்னொருவரும் பேசிய வார்த்தைகள் இவன் மனத்தில் அபாரமாக வேலை செய்கின்றன. சந்திராவின் விசாலமான கண்களில் நீர்த்தாரைகள் பெருகுவதுபோன்ற காட்சி அச்சுதனை திடும் திடும் என்று ஆட்டுகிறது. அவள் பிராணனை விட்டுவிடுவதாகக் கூறிய வார்த்தைகள் ஒருபுறம் வேலை செய்கிறது. பலவிதமான எண்ணங்களால் சகிக்கமாட்டாத பரம சங்கடத்தையடைந்து தவிக்கிறான்.

இரவு சுமார் 9-மணிக்குமேல் அவ்விடம் விட்டு எழுந்து பித்தன்போல் நடந்துவந்தான். அவனை யறியாமலேயே சந்திரா

வின் வீட்டுத் தெருவழியே வந்தான். இரவு 9 மணியாகிவிட்ட படியாலும் அத்தெரு ஓர் சாதாரண சிறிய தெருவாகையினாலும் வீடுகளில் மினுக் மினுக்கென்று எரியும் விளக்கு வெளிச்சத்தைத் தவிர வீதியில் முனிசிபல் லாந்தர் வெளிச்சம் எங்கோ ஒவ்வொன்று பிரகாசித்தது.

சந்தடி முக்கால்வாசி அடங்கிவிட்டதென்றே கூறலாம். அப்போதுதான் உதயமாகும் சந்திரனின் ஜோதி கீழ் வானத்தில் புறப்படுகிறது. நக்ஷத்திரங்கள் மட்டும் சுடர்விட்டு எரிகின்றன. நாய்களின் குலைப்பு அவ்வப்போது கேட்டுக்கொண்டிருந்தன. அச்சுதன் அந்த இருட்டில் சந்திராவின் வீட்டு வீதியில் கதவின் ஓரமாக நின்றான். தந்தையும் மகளும் பேசிக் கொண்டதிலிருந்து இவர்தான் கடற்கரையில் பேசியது என்று அறிகிறான். தன்னுடைய மாறுதலில், நிலைக் கலக்கத்தில் எதிரே செல்ல முடியாது கண்ணீர் பெருக மீண்டும் நடக்க வாரம்பித்தான்.

அவனுக்குள் பெருத்த குழப்பமும் கலக்கமும் ஏற்பட்டு விட்டதால் பற்பலவிதமாக யோசனைகள் ஒன்றன்பின் ஒன்றாகத் தோன்றி அவனை வருத்துகின்றன. தான் அவர்கள் முன்பு சென்று தாகன் விஷயத்தையும் எடுத்துக்கூறி அவர்களைத் தேற்றலாமா வென்று நினைத்தான். இந்த நடுநிசி வேளையில் தான் சென்றால் அவர்கள் என்ன நினைப்பார்களோவென்று சற்று தியங்கினான். பிறகு வீட்டிற்குச் சென்றான்.

தாய்தந்தையர்கள் பழய பல்லவியை மறுபடியும் பாடி வற்புறுத்தத் தொடங்கினார்கள். அச்சுதனுக்குள்ள வீரா வேசத்தில் ஓரே மூர்க்கமாகப் பேசத்தொடங்கி "நான் இனி சின்ன குழந்தையல்ல. ஓரே வார்த்தை. உங்களுடைய கொள்ளைக்கு இனி நான் மயங்கி உடன்படுபவனல்ல. உங்களுக்கு நான் வேண்டுமாயின் என்னிஷ்டப்படிச் செய்யுங்கள். நீங்கள் பிறர் வருத்தமறியாது இனியும் வரதக்ஷிணை வாங்கவேண்டுமென்று நினைத்தால் நான் சொல்லாது எங்காவது ஓடிவிடுவேன். பின்னர் என்ன கூறியும் பயனில்லை. இதுதான் தீர்மானம். இனி தொண தொண வென்று பேசவேண்டாம்." என்று கூறினான்.

இது கேட்ட பெற்றோர்கள் வாயில் வந்தவாறு ஆத்திரத்துடன் திட்டி "பெற்றோருக்கு அடங்காமலும் பெற்றோர் சொல் கேளாமலும் உள்ள பிள்ளை இருந்தாலென்ன இறந்தாலென்ன? கையிலிருந்த காசு முற்றும் உனக்காகத் தொலைத்துவிட்டோமே! அதைத் திரும்பி எப்போடா காண்பது. இத்தனை உயர்வான மருமகன் கிடைப்பதால் கொடுப்பதற்கு என்ன கேடா! அதோ பார். விஜயத்தின் பிள்ளைக்கு F. A. தான் பாஸாகி இருக்கிறது. அவனுக்கு நாலாயிரம் ரூபாய் ரொக்கமாகக் கொடுக்கவில்லையா! உனக்கேண்டா இத்தகைய துர்ப்புத்தி என்று பல்லைக் கடித்தும் தலையில் அறைந்துகொண்டும் கூறினார்கள்.

அச்சுதனுக்கு வெறுப்பும் ஆத்திரமும் அதிகரித்தன. வெகு முடுக்காக எழுந்து நின்று "அம்மா! நானே ஓர் உண்மையான மானமுள்ள, உடம்பில் சூடு சுரணை உள்ள மனிதனாகவிருப்பின் குப்பை வாரியாவது, மூட்டை தூக்கியாவது, செருப்பு தைத்தாவது ஒருவருக்கு அடிமைப்பட்டாவது நான் உங்களுடைய கடனைத் தீர்க்காமல் இருக்கப்போவதில்லை. இது சத்தியம். பெற்ற மகன் என்கிற பாசமற்றுத் தெருவில் போகிறவனுக்குச் செலவு செய்தது போலக் கூறும் உங்களுடைய மனப்பான்மையை அறியாது இதுகாறும் பாழாகிவிட்டேன். இனிமேல் என்னைப்பற்றிக் கவலையே வேண்டாம். பணத்துடன் நான் என்று வருகிறேனோ அன்று என்னைக் காணலாம். அதற்குள் ஒருகால் இறந்துவிட்டால் அடுத்த ஜென்மத்திலாவது அக்கடனைத் தீர்த்துவிடுவேன்." என்று கூறிக்கொண்டே ஒரு அங்கவஸ்திரத்தை எடுத்து மேலே போட்டுக்கொண்டு விர்றென்று மறைந்துவிட்டான். இந்த எதிர்பாராத வார்த்தைகளைக் கேட்ட தாயார் சற்று திகில்கொண்டு "அடே! அச்சுதா! அச்சுதா.! என்று" கூப்பிட்டாள். இதற்குள் அவள் புருஷன் "போடீ புத்தி கெட்டவளே! இவன் சொல்லும் வார்த்தை தேவ வாக்கு. இந்த அல்பம் நடத்திக்காட்ட எங்காவது ஓடிவிடுவானோ? இதெல்லாம் வெறும் பூச்சி மிரட்டல், படே படே படித்தவன் எல்லாம் லாட்டரி அடிக்கையில் இவனுக்கு யாரோ வேலை தூக்கிக் கொடுத்துவிடப் போகிறார்கள். போயேன்...நாய்

போல நாளைக்கு வந்து விழுகிறான். இதற்குள் என்னமோ குடி முழுகிவிட்டதுபோல ஆகாத்தியம் செய்கிறாயே!'' என்று தேற்றி விட்டார். எனினும் அந்தம்மாளின் மனது மட்டும் சாந்தியடையாமல் தவித்தது.

வீட்டை விட்டுச் சென்ற அச்சுதனுக்கு உண்மையில் துக்கம் தொண்டையை அடைத்துக்கொண்டது. இரவு நிசிவேளையின் பயமும் சற்றும் தோன்றாமல் மனத்திலுள்ள வேகத்தினால் தான் எங்காவது கண் மறையத் தொலைந்துவிடவேண்டும் என்ற பிடிவாதமான எண்ணத்துடன் நடந்துசெல்கிறான் நிலவின் பிரகாசம் முற்றிலும் பரவி வெகு ரமணீயமாக விளங்கியது.

அந்நேரத்தில் சுமார் 5-6 பேர்கள் வெகு தமாஷாகப் பேசிக்கொண்டு எதிரே வருவதைக் கண்ட அச்சுதனுக்குச் சற்று அச்சம் உண்டாகியது. அவர்களை தூரவிருந்து கண்டதும் இவர்கள் ஒரு கால் திருடர்களாக விருப்பார்களா என்ற எண்ணம் உண்டாகிய போது அவனையறியாது ஒருவிதமான பயமும் திகிலும் உண்டாகியது. அவன் கையில் கட்டியிருந்த கடியாரமும் மணிபர்ஸில் 5-ரூபாயிக்குச் சில்லரையும் தவிர வேறு அவன் கையில் இல்லை எனினும் தன்னை அவர்கள் அடித்து இம்சிப்பார்களோ வென்று தோன்றியதால் கடியாரத்தைக் கழட்டி மடியில் வைத்துக்கொண்டு ஓர் மரத்தடியில் ஒதுங்கி மறைந்துகொள்ள எத்தனித்தான்.

அதற்குள் அந்த மனிதர்கள் கிட்ட நெருங்கியதோடு இவன் தங்களைக் கண்டு பயந்து மரத்தடியில் மறைந்துகொள்ளப் போவதைப் பார்த்து கலகலவென்று எல்லோரும் நகைத்தவாறு அம்மரத்தின் பக்கத்திலேயே நின்றுவிட்டார்கள். அச்சுதனின் திகில் இன்னும் அதிகரித்து நடுக்கல் எடுத்துக்கொண்டது. அதோடு அவர்களை உற்றுக் கவனித்தான். அவர்களின் கைவிரல்களிலும் காதுகளிலும் பளபளவென்று மின்னும் வைர மோதிரங்களும் கடுக்கன்களும் உயர்தர உடையணிந்திருப்பதும் இவனுக்கு விளங்கியது.

அதே நிமிடத்தில் அவர்களில் ஒருவன் "ஐயா! எங்களைக் கள்ளரென்று எண்ணிப் பயந்துவிட்டீர்களா! ஐயோ! பாவம். பயப்

படாதீர்கள். நாங்கள் கள்ளரல்ல. கபடரல்ல. அடுத்த ஊர் கிருஷ்ணன் கோயிலில் இப்போது உத்ஸவம் நடக்கிறது. அங்கு சென்று ஸ்வாமி புறப்பாடு தரிசனம் செய்துவிட்டுச் செல்கிறோம். வேண்டுமாயின் நீரும் எங்களுடன் வாரும். இல்லையேல் உமது வீடு அருகாமையில் இருந்தால் அங்கு நாங்கள் துணை வந்து கொண்டு விடுகிறோம்'' என்றார்கள்.

இவ்வார்த்தைகளை அச்சுதன் முற்றிலும் நம்புவதற்கு முடியவில்லை. எனினும் கள்வர்கள் போலவும் தோன்றவில்லை. இவர்களுடன் ஒரு பெண்பிள்ளையும் இருப்பதால் அவனுடைய பயம் சற்று விலகியது. தான் இந்த நிசி வேளையில் தனிமையில் சென்று அவஸ்தைப்படுவதை விட இவர்களுடன் சென்று விடுவோம் என்று தோன்றியதால் அவன் சற்று தைரியமடைந்து "சார்! நான் உண்மையில் பயந்துவிட்டேன். நான் ஓர் ஏழை வழிப்போக்கன். ஆதலால் அச்சம் உண்டாகிவிட்டது. மன்னிக்கவேண்டும். நான் உங்களுடன் கூடவே வருகிறேன்.'' என்றான்.

உடனே அவர்கள் வெகு சந்தோஷத்துடன் தம் கையிலிருந்த டார்சு லைட்டை அவனுடைய முகத்திற்கு நேராகப் பிடித்துப் பார்த்தார்கள். "பேஷ்! வாப்பா போகலாம். எங்கள் எஜமான் கண்டால் மிக்க சந்தோஷமடைவார்.'' என்றார்கள். அதைக்கேட்ட அச்சுதனுக்கு மீண்டும் பயம் எடுத்துக்கொண்டது. சற்று தியங்கினான். அவர்கள் இதையறிந்து "என்ன தம்பீ! மறுபடியும் பயப்படுகிறாயே! எங்கள் எஜமானனும் திருடனல்ல. நம்மைப்போல மனிதன் தான்...வா! விஷயத்தைச் சொல்கிறோம்.'' என்று கூறியபடியே அச்சுதனின் கையைப் பிடித்து அழைத்துச் சென்றார்கள்.

அச்சுதனுக்கோ ஒன்றுமே தோன்றாமல் மிக்க பயமும் ஒரு விதமான உணர்ச்சியும் தோன்றி அபாரமாக வதைக்க வாரம்பித்தன. திமிரிக்கொண்டு போகவும் நினைத்தான். ஆனால் அவர்கள் நல்ல வார்த்தைகள் கூறி அழைத்துச் சென்றுவிட்டார்கள். குறுக்கு வழியில் சுமார் இரண்டுமைல் தூரம் சென்றதும் ஓர் ஊர் தெரிந்தது. அங்கு பிரம்மாண்டமான பங்களாவைப்போன்ற கட்டிடம்

ஒன்று நாற்புறமும் தோட்டங்களுடன் கூடி வெகு அழகாக விளங்கியது.

அதற்குள் அச்சுதனை அழைத்துச் சென்றவர்கள் "தம்பீ இனிமேல் பயப்படமாட்டாயே! நாங்கள் திருடர்களல்லவென்பதை இனியாவது நம்புவாயா?'' என்றார்கள். அச்சுதனுக்கு உண்மையில் இது எந்த இடம் என்றும் ஏன் தன்னை இங்கு அழைத்துவந்தார்கள் என்றும் ஒன்றுமே புரியாமல் திகைக்கிறான். பிரகாசமாக மின்சார விளக்குகள் எரிகின்றன. அனேகர் படுத்து நித்திரை செய்கிறார்கள். ஸ்திரீகளும் குழந்தைகளும் ஏராளமாகப் படுத்திருக்கிறார்கள். ஆதலால் இவர்கள் கள்வர்கள் அல்லவென்று தைரியமடைந்தான்.

அந்த வீடு முற்றிலும் அனேக அலங்காரச் சாமான்கள் காணப்பட்டனவே யன்றி அவைகளை அலங்காரமாய் வைக்கப் படவில்லை. இவனை அழைத்துக்கொண்டு வந்தவர்கள் எஜமானர் அறைக்குச் சென்று பார்க்கையில் அவர் நித்திரை செய்வதறிந்து அச்சுதனிடம் வந்து "தம்பீ! இதோ இவ்வறையில் படுத்துக் கொள்ளு. எஜமானர் நித்திரை போய்விட்டார். காலையில் உன்னைப் பார்ப்பார். நீ பயப்படாமல் நித்திரை செய்'' என்றார்கள்.

அச்சுதன் மெல்ல அவர்களை நோக்கி "ஐயா! நீங்கள் யாரு. இந்த இடம் என்ன இடம். உங்கள் எஜமானர் யாரு? நீங்கள் இங்கு என்ன செய்கிறீர்கள்?'' என்று பயந்தவாறு கேட்டான். அவர்கள் நகைத்துக்கொண்டே "எல்லா விவரங்களும் பின்னால் சொல்கிறோம். நீ படுத்துக்கொள்ளு.'' என்று அவனை ஓர் அறையில் கொண்டுவிட்டார்கள்.

அதற்குமேல் அச்சுதனுக்கு ஒன்றும் புரியவில்லை. அவ்வறை வெகு சுத்தமாகவிருந்தது. அங்கு போடப்பட்டிருந்த கட்டிலின்மீது படுத்துக்கொண்டான். நித்திரை என்பது இவனை விட்டு அகன்றுவிட்டது. "எதற்காக இவர்கள் இவ்விதம் என்னை உபசரிக்கின்றார்கள்...அதோ..எத்தனை புகைப்படங்கள்?'' என்று அங்குள்ள மேஜையருகில் வந்தான். மேஜை மீது எண்ணிக்கையற்ற ஸ்திரீ

களின் தனித்ததும் புருஷர்களின் தனித்ததுமான புகைப்படங்கள் தினுசு தினுசாக வைக்கப்பட்டிருந்ததை ஒவ்வொன்ருகப் பார்க்கப் பார்க்க அச்சுதனுக்குண்டான வியப்பிற்கு எல்லையே இல்லை.

அவன் இந்த புகைப்படங்களையும் ஆடம்பரமான இடத்தையும் நோக்க நோக்க இதோர் தாசியின் லீலா விடுதியோ வென்ற பெருங் குழப்பமும் சந்தேகமும் உண்டாகி அவனைத் திகைக்கடிச் செய்தது. அதே சமயம் ஓர் கிழவி ஒரு வெள்ளி கூஜாவில் பாலும் ஒரு தட்டில் சில பழங்களும் கொண்டு வந்து மேஜைமீது வைத்து விட்டு "ஐயா! இதைச் சாப்பிடுங்கள்" என்று கூறிவிட்டுச் சென்ருள்.

இதைக்கண்ட அச்சுதனுக்கு ஏற்கெனவே உதித்த சந்தேகம் ஊர்ஜிதமாகிவிட்டது. தான் ஏதோ போதாக்காலத்தின் கொடுமையினல் இந்த விபசார விடுதியில் வந்து மாட்டிக்கொண்டதாக எண்ணி அபாரமான பயமும் சகிக்கவியலாத சங்கடமும் கொண்டு தவிக்கையில் அவ்வறைக் கதவின் பக்கம் ஓர் சிங்கார வனிதை அதி ரூபலாவண்ய சுந்தரி நிற்பதைக் கண்டு தன்னை மறந்து ஓர் துள்ளு துள்ளி மிரண்டுபோய் பயமே உருவாய், வியர்வை குபீர் என்று பொங்கி வழிய மார்பு துடிதுடிக்கக் கல்லாய்ச் சமைந்துவிட்டான்.

---

## 17-வது அதிகாரம்

## குருவிக்கார ஆட்டமும் குள்ள நரி வேட்டையும்

போலீஸாரும் வெகு மும்முரமாக ரயில்வே திருட்டைக் கண்டு பிடிக்கும் பொருட்டுத் தம்மாலாகிய பலவிதமான தந்திரங்களையும் செய்து வெகு பிரயாசையுடன் கண்டுபிடிக்க முயன்றும் ஒன்றும் பலிதமாகவில்லை. நாயுடுகாருவுக்கும் இதோர் சிறிய வேலை தானே

என்ற அலக்ஷியம் உண்டாகிவிட்டது. எனினும் மெல்ல அதைப் பற்றியும் சிறிது கவனித்து வந்தார்.

எந்த ஸ்டேஷனிலிருந்து எந்த ஸ்டேஷனுக்கு மத்தியில் திருட்டுப் போயிற்றோ அந்த காட்டு வழியில் தமது கையாட்களில் சிலரை குருவிக்காரர்கள்போல வேடமணிவித்து அவர்கள் எங்கு வேண்டுமானாலும் டேரா அடித்துக்கொண்டு தங்கும் வழக்கம்போல அந்தவிடத்தில் தங்கச்செய்து பின்னர் தான் அடிக்கடி சென்று விசாரித்துக்கொண்டு வந்தார்.

குருவிக்காரர்கள் போல அவ்விடத்தில் டேரா போட்டுக் கொண்டிருக்கும் நாயுடுவின் கூட்டத்தில் முதன்மை ஸ்தானம் பெற்று விளங்கும் அம்புஜம் அசல் குருவிக்காரிபோல வேஷ மணிந்து வெகு திறமையாக நடிக்கத் தொடங்கினாள். "லாலேலே! லால்லலே...நன்னா நானே நன்னேனேனே...என்று பாடியபடி ஒரு தகரத்தில் அதற்குச் சரியாகத் தாளம்போடுவதும் ஆடுவதுமாக இருக்கிறாள்.

அந்த பக்கமாக வயல் காட்டுகளுக்கும் பக்கத்து கிராமத் துக்கும் போகும் ஜனங்கள் இந்த இடத்தில் அபூர்வமாக ஓர் குரு விக்கார டேரா இருப்பதும் அவர்கள் உல்லாசமாக ஆடுவதும் பாடு வதும் கும்மாளமடிப்பதையும் கண்டு இதையே வேடிக்கை பார்த்து விட்டுச் செல்லலானார்கள். அம்புஜத்தின் அழகும் அவளுடைய அபாரமான வசீகரத்தன்மை பொருந்திய விசாலமான கண்களின் பார்வையும் ஒன்றுகூடி ஜனங்களையப்படியே மயக்கிவிட்டன.

மாலை வேலைகளில் இந்த ஆடல் பாடல்களைப் பார்ப்பதற் கென்றே பல ஜனங்கள் இங்கு கும்பு கூடத் தொடங்கினார்கள். ஒவ்வொருவரும் "அடேயப்பா! குருவிக்காரியாக இருந்தாலும் என்ன அழகு! என்ன ஆட்டம்! என்ன பாட்டு! பலே ஷோக்குக் காரி ஸார்! இக்காலத்தில் எத்தனையோ ஸினிமாக்கள் வருகின்றன. அதில் உபயோகமற்ற கட்டைகளை எல்லாம் பிடித்துப்போட்டு ஜனங்களிடம் காசைக் கொள்ளையடிக்கின்றார்களேயன்றி உண்மை



யான நடிப்புத் திறமையும் பாடலும் முகவெட்டும் உடையவர்கள் நூற்றுக்கு ஒன்று கிடைப்பது அரிதாக விருக்கிறது. இவளைப் பிடித்துப்போட்டால் எத்தனை நன்றாகவிருக்கும்'' என்று சொல்லிக்கொண்டார்கள்.

இந்த வார்த்தைகள் எல்லாம் அம்புஜத்தின் காதில் விழாம லில்லை. எல்லாவற்றையும் கேட்டுக்கொண்டே பின்னும் அழகாகப் பாடவும் ஆடவும் தொடங்கினாள். ரயிலில் போகும் வரும் ஜனங் களும் இதையோர் தமாஷாகப் பார்த்துச் சென்றார்கள். இங்கு

கும்பு கூடுபவர்களேயும் அவர்களின் பேச்சுக்களேயும் அம்புஜமும் மற்றையோரும் வெகு கூர்மையாகக் கவனித்து வந்தார்கள்.

இங்கு கூடும் கூட்டத்தில் ஒருவன் தினந்தோறும் இவர்களுடைய கூத்தைப் பார்த்துச் சென்றவன் அம்புஜத்தினிடம் வந்து ஹிந்தியில் "உனக்கு என்ன பாஷைகள் தெரியும்" என்று கேட்டான். அம்புஜம் வெகு சரஸமாயும் சிரித்த முகத்துடனும் "எனக்கா! ஹிந்தி, தமிழ், தெலுங்கு, மலேயாளம், கன்னடம் எல்லாம் தெரியும். நாங்கள் ஒவ்வொரு ஊராகச் சுற்றுவதால் எனக்கு எல்லாம் கொஞ்சம் கொஞ்சம் தெரியும்" என்றாள்.

இது கேட்ட அம்மனிதன் "அப்படியாயின் எல்லா பாஷையிலும் பாட்டுக்களும் ஆட்டங்களும் ஆடுவாயோ?" என்றான்.

அம்பு:—ஆம். எல்லா பாஷையிலும் பாடுவேன்; ஆடுவேன். ஒரு சமயம் தெருக்கூத்து நாடகத்தில் கூட நடித்திருக்கிறேன்.

அவன்:—அப்படியானால் இப்போது பூனவில் ஒரு தேவாலயத்தில் உத்ஸவம் நடக்கிறது. அங்கு உங்களே அழைத்துப் போகிறேன். இந்த கூடாரத்தை அங்கு அடித்துக்கொண்டு "நாலு பாஷைகளிலும் பாட்டும் ஆட்டமும் ஆடப்படும்" என்று விளம்பரம் செய்து ஒரு அணு டிக்கட்டு வைத்தால் எத்தனேயோ சுலபத்தில் ஏராளமான பணத்தைச் சம்பாதித்துவிடலாம். அதில் பாதி உனக்கே கொடுக்கிறேன். மீதியை எனக்கும் மற்ற செலவுக்கும் எடுத்துக் கொள்கிறேன். அம்மாதிரி செய்வதில் உனக்கு யாதொரு தடையுமில்லேயே. நானும் ஒரு ஏழை: எனக்கும் உதவி புரிந்தது போலாகும்.

அம்பு:—அப்படியா! எனக்கு ரொம்ப சந்தோஷம். அப்படியே ஏற்பாடு செய்யுங்கள். எங்களுக்கும் பிழைப்பு உண்டாகட்டும்—என்றாள். பக்காப் பேர்வழியாகிய அம்புஜம் சோழியன் குடுமி சும்மா ஆடுமோ வென்பதுபோல அவர்களிடம் வேலே இல்லாமல் ஒப்புக்கொள்வாளா! அம்மனிதன் தினம் வரும்போதெல்லாம் அவனே உற்றுக் கவனித்துவந்தாள். மனிதனேப் பார்க்கையில் எவ்

விதமான சந்தேகமும் பிறருக்குத் தோன்றாதபடி இருந்தான். எனி னும் அவனிடத்தில் கைத்துப்பாக்கி இருப்பதையும் அதை தன் மடிக்குள் வைத்திருப்பதையும் அம்புஜம் எப்படியோ வெகு யூக மாகக் கவனித்துவிட்டாள்.

அது எப்படியெனில் அவன் உட்கார்ந்து பேசிக்கொண் டிருந்த சமயத்தில் அருகிலிருந்த மரத்தின்மீது இரு அணில் பிள்ளைகள் ஒன்றோடொன்று சண்டையிட்டுக்கொண்டு தபீ ரென்று அம்மனிதனின் தலைமீது தபீரென்று விழுந்ததும் அவன் அலறியடித்துக்கொண்டு பயந்துபோய் துள்ளிக் குதித்து இரண்டு மூன்றடிகள் ஓடினான். அப்போது ஓர் தோல் பையில் ரகஸியமாக வைத்து மடியில் துணியில் கட்டி இருந்த கைத்துப்பாக்கி ஓடிய ஓட்டத்தில் தபீரென்று கீழே விழுந்துவிட்டது. மறுக்ஷணமே அதையவன் வெகு விரைவில் எடுத்து மறைத்துவிட மடியில் சொருகிக்கொண்டு ஒருவிதமாக விழித்துக்கொண்டே இதை யாரும் கவனிக்கவில்லையாவென்று ஒரு முறை கவனித்து விட்டு மீண்டும் இங்கு வந்து அப்பா! பாழும் அணிற்பிள்ளை கூட்டத்தில் ஒரு கலக்கு கலக்கிவிட்டது. மடியிலிருந்த பர்ஸெல்லாம் கீழே விழுந்து விட்டது.'' என்று நயமாகக் கூறிய பிறகுதான் அவனிடம் வந்து முன்பு தெரிவித்தபடி பேசினான்.

அந்த ரகஸியத்தை யறிந்த பிறகுதான் அம்புஜமும் வெகு சந்தோஷத்துடன் ஒப்புக்கொண்டாள். சாதாரணமாக எந்த மனி தனும் துப்பாக்கி வைத்துக்கொள்ளக்கூடாது என்கிற சட்டம் மக்களறிந்திருக்கையில் இவன் இதை வைத்திருந்ததே அம்புஜத் திற்குப் பெரிய சந்தேகம் உண்டாகிவிட்டது. இம்மனிதன் அந்த கூட்டத்தில் சேர்ந்தவனா அன்றி வேற்று மனிதனா! எவனாகவிருப் பினும் ரூலுக்கு விரோதமாகத் துப்பாக்கி வைத்திருப்பதைக் கண்டு பிடித்துவிடவேண்டும்'' என்று தனக்குள் தீர்மானித்துக் கொண்டாள்.

தான் கண்டுபிடித்ததை வெளிக்குக் காட்டாமல் வெகு சாமர்த்யமாய்'' ஏனய்யா! நாங்க இந்த ஊரைவிட்டு வேறு ஊருக்

குப் போய்விடுவோம். அதற்குள் நீங்கள் சொல்கிறபடி செய்தால் நல்லது'' என்றாள். அதற்கந்த மனிதன் "அதற்கென்ன கவலையே படவேண்டாம். நான் நாளை இரவே நடத்துவதற்கு ஏற்பாடு செய்துவிடுகிறேன்.'' என்று வெகு முடுக்காகக் கூறினான்.

அம்புஜம் அதற்கிசைந்து சந்தோஷத்துடன் பின்னும் பாடவும் ஆடவும் துடங்கினாள். அந்த மனிதனும் போய்விட்டான். அன்று இரவு ரயில் அம்மார்க்கமாய்ப் போய்க்கொண்டிருக்கும் பொழுது வழக்கம்போல அம்புஜம் கவனித்துக்கொண்டே இருந்தாள். ஓடும் ரயிலிலிருந்து கனமாக எதையோ வீசி எறிந்தது போலத் தோன்றியது

இதை உற்று நோக்கியவாறு இருந்தாள். ரயில் வேகமாகச் சென்றுவிட்டது. உடனே அம்புஜம் தன் கூட்டத்தினருக்கு இவ் விஷயத்தைத் தெரிவித்துக் கையில் விளக்குடன் அதை கவனிக்கத் தொடங்கினாள். ஓடும் ரயிலிலிருந்து வீசி எறிந்ததால் வெகு தூரத்திற்கு அப்புறம் போய் விழுந்துவிட்டது. ஆதலால் உடனே இவர்களுக்கு அகப்படவில்லை எனினும் அம்புஜம் அதை எவ்விதமாவது கண்டுபிடித்துத்தான் தீரவேண்டுமென்று கங்கணங் கட்டிக் கொண்டாள். வெகு நேரம் வெகு தூரம் தேடியபிறகு ஒரு புதரில் ஒரு மூட்டை அகப்பட்டது.

அம்புஜம் வெகு சந்தோஷத்துடன் அதை எடுத்தாள். அது மிகவும் பளுவாக இருப்பது கண்டு சிறிது வியப்புற்றவாறு அவ் விடத்திலேயே அதை யவிழ்த்துப் பார்த்தாள். மகா வீரம் பொருந்திய வனிதையாகிய அம்புஜமே திடுக்கிட்டு நிமிட நேரம் கம்பம்போல நின்றாள். "கோபால்! இந்த மூட்டையைப் பாரு'' என்று கூப்பிட்டாள்.

காவல் பார்த்துக்கொண்டிருந்த கோபாலன் அந்த மூட்டையைப் பார்த்ததும் அலறினான் "ஆகா! என்ன அனியாயம்! எத்தனை காதுகள், எத்தனை கைவிரல்கள் அடாடா! இதென்னமோ பிரம்மாண்டக் கூட்டத்தினர்கள் பிரயாணிகளைப்போலவே ரயிலில்

சென்று இம்மாதிரி காரியங்களைச் செய்கிறார்கள் என்றுதான் நான் நினைக்கிறேன்.'' என்றான். இன்னும் ஏதாவது இருக்கிறதா வென்று பார்த்தார்கள். பின்னும் சிறிது தூரத்தில் தோல் பையொன்று கிடந்தது. அதையும் எடுத்துக்கொண்டு தமது டேரா அடித்த இடத்திற்கு வந்தார்கள்.

இன்னொரு கூட்டத்தினரை அந்த பக்கம் பார்க்க அனுப்பி இருந்தாள். அவர்கள் திரும்பிவரக் காணாமையினால் அம்புஜத் திற்கு சற்று அச்சம் உண்டாகியது. டேராவின் வெளியே காவல் வைத்துவிட்டுத் தான் உள்ளே சென்று அந்த மூட்டைகளையும் தோல் பையையும் அவிழ்த்துப் பார்த்தாள். அந்த காதுகளையும் விரல்களையும் ஒவ்வொன்றாக எடுத்துப் பரிசோதித்துப் பார்த்ததும் அவளுக்கு முதலில் உண்டாகிய திடுக்கிடலுக்கு மாறாக பெரிய ஆச்சரியமும் அடங்காத கோபமும் நகைப்பும் உண்டாயின.

அந்த விரல்களும் காதுகளும் மூக்குகளும் வெறும் மெழுக் கினால் அசல் தத்ரூபம் காதுகள்போலச் செய்து ரத்தத்தில் தோய்த்து அப்போதே வெட்டியதுபோலான குறிகள் காட்டி அவைகளுக்கு கம்மல்கள், மாட்டல்கள், டோலாக்குகள் முதலியன மாட்டி விரல்களுக்கு மோதிரங்களும்,மூக்கில் திருகாணி முதலியன வும் போட்டிருந்ததைக் கண்டதும் பக்காப் பேர்வழியாகிய தானே ஏமாந்துவிட்டதையறிந்து அபாரமான ஆத்திரம் பொங்கிவிட்டது.

அதில் போட்டிருக்கும் நகைகளும் கிலுட்டு நகைகள் என்றதைத் தெரிந்துகொண்டாள். அந்த குப்பை கூளத்தின் மத்தி யில் ஒரு தகர டப்பி இருந்தது. அதை எடுத்துப் பார்த்தாள். அதில் ஒரு கடிதச் சுருள் மட்டும் இருந்தது. அதைப் பிரித்துப் படித்தாள்.

"ஹா திமிரும் அகம்பாவமும், உனக்கு மிஞ்சியவர்களும் இல்லை என்று கர்வமும் கொண்ட அம்புஜா! சபாஷ்! குருவிக் கார தொம்பச்சி வேஷம் உனக்குப் பொருந்தி இருப்பது போல அசல் குருவிக்காரிக்குக் கூடப் பொருந்தவில்லை. இந்த

பாலமணி கிரைமணி நடிப்பில் ஏதோ சாதித்துவிடுவதாக எண்ணி அபாயமான காட்டு மத்தியில் வந்து தைரியத்துடன் இரவு பகல் கண்விழித்துக் கிடக்கிறாய் பாவம். வீணான ஆசையை விட்டுவிடு. இந்த வீரனை.........நீ பிடித்துவிடலா மென்று கனவு காணாதே! அது வெறும் பூச்சி மிரட்டல் தான். பக்காப் பேர்வழியாகிய நீயும் ஏமாந்து தவிக்கும் பொருட்டே இந்த மூட்டையை வீசி எறிந்தேன். எல்லோருக்கும் மேல் கொழுப்புப்பிடித்த நாயுடுகாரு இந்த கேஸை ஏதோ அலக்ஷியமாக எண்ணி கத்துக்குட்டிகளையும் உன்னையும் இதில் இறக்கிவிட்டு வேடிக்கை பார்க்கிறார் பாவம். ஆனால் அவர் இப்போது எப்படி இருக்கிறார் தெரியுமா! முற்காலத்துச் சரித்திரத்தில் சுவருக்குள் கைதியை வைத்துக் கட்டிடம் கட்டியதாகப் படித்திருப்பாய். அந்த தண்டனையை உன்னருமை பிதாவுக்கும் மனமுவந்து அளித்தாய்விட்டது. இன்னேரம் பாதி சுவருடன் சுவராக மறைந்திருப்பார். இனி தப்புவது என்பது மறுபிறவியில்தான். நாளை இரவு நாடகம் நடக்கப்போவதாக எண்ணி இருக்கிறாயே! அது வெறும் விளையாட்டுதான் என்பதை மகா புத்திசாலியாகிய நீ தெரிந்துகொண்டிருப்பாய்.;வீணாக ஏமாறாதே. மரியாதையாக டோராவைத் தூக்கிக்கொண்டு போய்விடு. இனிமேல் நீ இம்மாதிரி விஷயங்களில் தலையிட்டால் நீ ஒரு கட்டிடத்தின் கடைகாலிலோ சுவரிலோ மறைவாய் என்பது நிச்சயம். உன் பிதா அல்பமாக எண்ணிய கேஸினால் தான் அவருக்கு முடிவு ஏற்பட்டது. பத்திரம். இக்கடிதத்தைப் போலீஸாரிடம் காட்டி எங்களைப் பிடித்துவிடலாமென்று நினைப்பாய். அது இனி உன் முப்பாட்டனாலும் முடியாது. ஜாக்ரதை ...''

என்று கையொப்பமில்லாத மொட்டை எழுத்தாகவிருந்தது. இதைப் படிக்கும்போதே அம்புஜம் எவ்வளவு தைரியசாலியாகவிருப்பினும் ஸ்திரீகளுக்குள்ள இயற்கையான அச்சமும் பயமும் ஒன்றுகூடி அவளைக் குலைநடுங்கச் செய்துவிட்டது. அதோடு நாயுடுவைப்பற்றி எழுதி இருக்கும் விஷயமானது உண்மையிலேயே

அவள் மனதைத் தாக்கி கலக்கிவிட்டது. "ஐயோ! ஒருகால் துஷ்டர்கள் இவ்விதமும் செய்திருக்கிறார்களோ! ஹா!... அப்படி ஏதேனும் செய்திருந்தால் என்ன செய்வேன். ஈசா! யாருக்கு எந்த தீங்கு நேரிடினும் என் பிதாவுக்கு ஒன்றுமில்லாது காப்பாற்ற வேண்டும்'' என்று தனக்குள் பிரார்த்தனை செய்தாள்.

தோல் பையை விளக்கு வெளிச்சத்தில் கவனிக்கையில் அது தன் பிதாவின் தோல்பையாகவிருப்பது கண்டு பின்னும் அபார மாகத் திடுக்கிட்டு "அவருடைய பை இங்கு எவ்விதம் வந்தது.? அவர் வெளியில் எங்கு சென்றாலும் இந்த சிறிய தோல் பை இல்லாது போகமாட்டாரே! இதெவ்விதம் எதிரிகள் கையில் கிடைத்தது?'' என்ற பெருங் குழப்பமும் திகிலும் உண்டாகிவிட்டது.'' "கோபால்! இங்கு வா! இதோ இந்த விபரீதங்களைப் பாரு.'' என்றாள். உடனே கோபாலன் இந்த சாமான்களையும் கடிதத்தையும் பார்த்துப் பெரும் கலக்கமடைந்தான். "அம்புஜம்! இப்போது நாம் என்ன செய்வது? எனக்கு ஒன்றும் தோன்றவில்லையே! அவருக்கா இத்தகைய ஆபத்துக்கள் நேர்ந்திருக்கும்?'' என்று சகிக்கக் கூடாத பரம சங்கடத்துடன் கூறினான்.

அம்புஜத்திற்கும் இதுவிஷயத்தில் அபாரமான திகிலே பிடித்துக்கொண்டது. எனினும் அவருக்கு இத்தகைய ஆபத்துக்கள் நேரும்படியாக அவர் ஒருகாலும் அகப்பட்டுக்கொள்ளமாட்டார். இவர்கள் நம்மைக் கலங்க வைக்க எண்ணியே இம்மாதிரி செய் திருக்கவேண்டுமென்று தான் நான் நினைக்கிறேன். எதற்கும் நாம் இந்த இடத்தைவிட்டு டோராவைக் கலைத்துவிட்டால் அந்த அயோக் யர்களுக்குப் பெரிய சந்தேகமும் பரிகாஸமும் ஆகிவிடும். ஆகை யினால் நாம் இங்கிருந்தபடியே நாயுடுவின் க்ஷேமத்தை யறிய வேண்டும்...

"கோபால்! நீ உன் வேஷத்தைக் களைந்துவிட்டு இந்தப் பிரதேசத்திலுள்ள நாயுடுவின் ஜாகைக்குச் சென்று விவரம் அறிந்து வா. அங்கு தகவல் கிடைக்கவில்லை என்றால் ஊருக்குத் தந்தியடித்து விசாரித்துக்கொண்டு வா.'' என்றாள். உடனே

கோபாலன் அதற்கு இசைந்து தன் வேஷத்தைக் களைந்து வேறு வேஷத்துடன் சென்றுவிட்டான்.

அது பரியந்தம் வெகு உத்ஸாகமாயிருந்த அம்புஜத்திற்கு அவளையறியாது ஒருவிதமான கிலி பிடித்துக்கொண்டது. தன் பிதாவுக்கு ஒன்றுமில்லாது காப்பாற்றவேண்டும் என்று கடவுளைப் பிரார்த்தனை செய்தபடியே அங்கு கிடைத்த மூட்டையிலுள்ள சாமான்களை வெகு ஜாக்ரதையாக பத்திரப்படுத்திக்கொண்டு தன் படுக்கையில் படுத்தாள்.

அப்போது பின்மாலை மூன்று மணி இருக்கும். சிலு சிலுப்பான காற்று வெகு மனோகரமாக வீசிக்கொண்டிருக்கிறது. காற்றினால் மரங்கள் சலசலவென்று ஆடி ஓசை செய்வது மனத்திற்கு மிகவும் ரமணீயகரமாகத் தோன்றியது. கரிய வானத்தில் நட்சத்திரச் சுடர்கள் மட்டும் பிரகாசித்துக்கொண்டிருந்தன.

அம்புஜம் இரவு வெகு நேரம் வெகு தூரம் ஓடிக் களைத்து மனத் திகிலுடன் கடவுளை வேண்டியபடியே படுத்ததும் களைப்பின் பரிகாரமாக காற்றடித்த இனிமையில் தன்னை மறந்து தூங்கி விட்டாள்.

இருள் பிரியவில்லை. எங்கும் ஒரே அந்தகாரமாக விருக்கிறது. அச்சமயம் அயர்ந்து நித்திரை செய்துகொண்டிருக்கும் அம்புஜத்தை நான்கு தடித்த ஆள்கள் அவள் படுத்திருந்த கயிற்றுக் கட்டிலுடன் அலாக்காகத் தூக்கிக்கொண்டு சென்றார்கள். அம்புஜம் சடக்கென்று கண்விழித்துப் பார்க்கையில் தன்னை யாரோ தூக்கிச் செல்வதை யறிந்து திடுக்கிட்டாள். செல்பவர்கள் நடையாக இல்லாமல் ஓட்டமாக ஓடுகிறார்கள். எத்தகைய தைரியசாலியாயினும் அத்தகைய நெருக்கடியான சமயத்தில் தன்னை மீறிய பயமும் திகிலும் அடைந்துவிடுவது சகஜமல்லவா! அம்புஜம் செய்வதறியாது கதி கலங்கிப் போய்விட்டாள்.

## 18-வது அதிகாரம்

## வாழ்க்கையின் சோதனை—வனிதையின் வேதனை

பத்மநாபன் இரண்டு நாட்களும் தன்னுருயிர்க் காதலியுடன் வெகு அன்யோன்யமாகவும் பேரன்புடனும் மகிழ்ந்திருந்தான். "இனியும் ஊருக்குச் செல்லாதிருப்பது சரியல்ல. மீண்டும் அவர்கள் சந்தேகப்பட்டுக் கொண்டு வந்துவிட்டால் கஷ்டம். நான் ஊருக்குச் சென்றதும் நாம் என்றும் பிரியாதிருப்பதற்கான மார்க்கத்தைச் செய்து கொண்டு உன்னை வந்தழைத்துச் செல்கிறேன். கண்மணீ! கண்ணீர் விடாதே.'' என்று ஜானகிக்குத் தேறுதல்கள் கூறினான்.

ஜானகி:—பிராணகாந்தா! தங்களை நான் இனி அரை க்ஷணமும் பிரிந்திருக்க முடியாது. தாங்கள் ஊருக்குச் சென்ற உடனே இந்த ஏழையின் மீது ஞாபகமிருந்து வெகு சீக்கிரத்தில் என்னை அழைத்துக்கொள்ளவேண்டும். நாதா! எக்காரணம் பற்றியும் தடங்கலோ, தாமதமோ ஆகக்கூடாது. நாதா!...ஏன்? என்னை உடன் அழைத்துச்சென்றால் என்ன செய்துவிடுவார்கள். நானும் வருகிறேனே.

பத்ம:—கண்மணீ! எனக்கு மட்டும் அந்த அன்பு இல்லை என்று எண்ணுகிறாயா! நாம் இருவரும் சென்று அவர்கள் முன்பு நின்றால் என்னவர்கும் தெரியுமா! என் பெற்றோராயிற்றே! என்று நான் உயர்வாகக் கூறிவிடமுடியுமா! நம்மிருவரையும் உடனே இவ்வுலகத்தையே விட்டு ஒழித்துவிட்டு மறு வேலை பார்ப்பார்கள். உன்னால் ஒரு காலத்தில் சந்தோஷப்படவிருக்கும் உன் பெற்றோருக்கு தீராத ஆபத்துக்கள் தான் நேரும். ஆகையினால் பொறுத்த நாள் பொறுத்தாய். இனியும் சிறிது நாட்கள் பொறுமையாகவிரு. என்

இன்பவல்லி! நான் இனி வேறு விவாகம் செய்துகொள்வேன் என்று கனவிலும் கருதாதே! இந்த ஜென்மத்தில் மறு விவாகம் என்பது கிடையாது. கண்ணே! கண்ணீர் விடாதே! நான் சென்று வருகிறேன். ஏதேனும் இக்கட்டுகளால் முடியவில்லை எனினும் வித்யாசமாக எண்ணுதே'' என்று தேற்றிப் பலவிதமான ஆறுதல் மொழிகளைக் கூறிப் பின்னர் ரங்கநாதன், சுகந்தாவிடமும் விடைபெற்றுக் கொண்டு ஜானகியைப் பிரிய மனமின்றிப் பிரிந்து சென்றான்.

ஜானகிக்கு உலகமே இருண்டுவிட்டதுபோலாகிவிட்டது. அவளுடைய மனம் கட்டுக்கடங்காத வியப்பையடைந்து துவண்டு விட்டாள். சுகந்தாவின் தேறுதல் மொழிகளால் சிறிது தெளிவு பெற்று வீட்டிற்குச் சென்றாள். சுகந்தா இங்கு வருவதும் சுகந்தா வீட்டிற்கு ஜானகி வருவதும் தடைபடவில்லை. பத்மநாபன் ஊருக்குச் சென்றதும் ரங்கநாதனுக்கும், ஜானகிக்கும் கடிதமெழுதினான்.

அக்கடிதத்தையே இவர்கள் எதிர்பார்த்துக்கொண்டிருந்தார்கள். ஆதலால் கடிதம் வந்த உடனே ஜானகி வெகு ஆவலுடன் படிக்கத்தொடங்கினாள்.

"எனது அன்பின் ஆலயம் போன்ற காதலீ! ஜானகீ! நான் உன்னுடைய நினைவாகவே பித்தன் போன்று ஊருக்கு வந்து சேர்ந்தேன். கண்மணீ! அங்கு மாயவலையில் மயக்கங் கொண்டுவந்த என் பெற்றோர்கள் ஒவ்வொரு நிமிடமும் என் வரவுக்கும் புதிய சம்மந்திகளின் வரவுக்கும் வெகு அன்புடனும் ஆவலுடனும் காத்திருந்த வேடிக்கையை எழுதத் திறமன்று. நான் மறு வண்டியிலேயே வராததற்கு என்மீது கடுங் கோபங்கொண்டு என்னைத் திட்டிக்கொண்டே இருந்தார்களாம். நான் உடம்பு சரி இல்லை என்று எழுதிய கடிதம் பார்த்ததும் நேரே வந்து அழைத்து வரலாமாவென்று எண்ணினார்களாம். ஆனால் புதிய சம்மந்திகளின் வரவும் 10000 ரூபாயின் ஆசையும் அவர்களைத் தடுத்துவிட்டதாம். அதுவும் தெய்வச் செயல்தான்.

நான் வந்து சேர்ந்ததும் என் உடம்பைப்பற்றி கூட விசாரிக்கத் தோன்றவில்லை. "ஏண்டா இன்னும் அவர்கள் வரவில்லை? காப்பியும் பலகாரமும் செய்து செய்து தினம் பாழாகிக்கொண்டு வருகிறது. வெத்திலை எல்லாம் வாடியும் அழுகியும் போகிறது. என்னடா! இப்போதே இப்படி இருந்தால் பிறகு எப்படியடா இருப்பார்கள்?" என்று ஆரம் பித்தார்கள்.

உடனே நான் மதனி சொல்லிக் கொடுத்தபடியே பாடத்தை ஒப்பித்துவிட்டேன். அதாவது அவர்கள் வரு வதற்காகத் தான் ரூபாயுடன் புறப்பட்டார்களாம். வண்டியி லேயே வரும்போது வழியில் கொள்ளைக்காரர்கள் அவர்களை மடக்கி நன்றாக அடித்துக் கையிலிருந்ததெல்லாவற்றையும் அபகரித்துக்கொண்டுபோய்விட்டார்களாம். அவர்களடித்த அடியில் பெண்ணின் மாமாவுக்கு உயிரே போய்விட்டதாம். முதன்முதல் கல்யாண விஷயமாகப்புறப்படுகையில் இத்தகைய அபசகுனமும், பேராபத்தும், சாவும் நிகழ்ந்துவிட்டதால் இந்த இடத்தில் சம்மந்தம் செய்ய மனமில்லை என்று இன்று காலையில் தான் வந்து சொல்லிவிட்டார்கள். இதைத் தெரி விக்கத்தான் நான் உடனே உடம்பு அசௌக்யத்தையும் பார்க் காமல் வந்தேன் என்றேன்.

இதைக் கேட்ட இருவரும் 'ஆ!' என்று அலறி அரை நாழிகை நேரம் பிரக்ஞையே இல்லாது தம்பித்துவிட்டார்கள். காசாசைப் பேயின் ஆட்டம் அவர்களை நன்றாக ஆட்டியது. "இனி என்னடா செய்வது? இதில் ஏதோ பெரிய மோசந் தாண்டா இருக்கிறது. உனக்கு விவாகம் ஆகாமலிருப்பதற் காக அந்த படுபாவிகள் என்னமோ மந்திரமோ, தந்திரமோ போட்டுவிட்டார்கள். அதனால் தான் இப்படியாகிவிட்டது ஒருகால் அவர்களே கொள்ளைக்காரர்களையும் தயார் செய்து இப்படி செய்துவிட்டார்களோ, என்னவோ!...இருக்கட்டும்... நான் அவர்களை ஒரு கை பார்த்துக்கொள்கிறேன்" என்று உறுமினார்கள்.

அன்பே!...ஜானகி! விஷயம் எதுவுமே இல்லாதிருக்கையில் அவர்கள் மனம் எவ்விதம் யோசனை செய்கிறது பார்த்தாயா! இதற்காகத்தான் நான் பயப்படுகிறேன். நீ கவலைப் படாதே! இன்னும் கொஞ்ச நாள் பார்க்கிறேன். மிஞ்சிவிட்டால் அதற்குமேல் நடக்கிறபடியாகட்டும். இந்த கடிதம் உன் பெற்றோருக்குத் தெரிந்துவிடப் போகிறது ஜாக்ரதை. நீ கடிதமே போடாதே. இங்கு கடிதம் வந்தால் எமன் கையில் அகப்படுவதுபோலத் தான் ஆகும். கடவுளைப் பிரார்த்தனை செய்துகொண்டிரு. என்னால் கூடுமானவரையில் கடிதம் போடுகிறேன். ஒவ்வொரு நிமிடமும் உன்னையே நினைத்து ஆநந்தமடையும்

உன் காதலன்

பத்மநாபன்''

அதைப் படித்ததும் ஜானகிக்குப் பேரானந்தம் உண்டாகியது. அக்கடிதமே தன் காதலனாக எண்ணி அகமகிழ்ந்தாள். பத்மநாபன் ஏதாவது சாக்கு வைத்துக்கொண்டு ஒரு மாதத்திற்குள் மூன்று முறை வந்து ஜானகியைக் கண்டு களிப்புடன் தேற்றிச் சென்றான்.

பத்மநாபனுக்கு திடீரென்று ஓர் பெரிய ஜமீந்தாரிடம் அந்தரங்கக் காரியதரிசி வேலை மாதம் 200 ரூபாயில் அவன் சற்றும் எதிர்பாராது அதிர்ஷ்டவசமாகக் கிடைத்தது. அதையவன் உடனே ஒப்புக்கொண்டு இந்த சந்தோஷச் செய்தியையும் ஜானகிக்குத் தெரிவித்தான்.

துரதிருஷ்டவசத்தினால் ஜானகியின் பிதாவை திடீரென்று வடக்கே வெகு தூரத்தில் மாற்றிவிட்டார்கள். இதற்குமுன்பே சுகந்தா பிரஸவத்திற்காக தன் தாயார் வீட்டிற்குப் போய்விட்டாள். ரங்கநாதன் மட்டும் இருப்பதால் ஜானகி அங்கு போவதற்கு முடியாதுபோய்விட்டது. சில தினத்திற்குள்ளேயே ரங்கநாதனையும் பாலக்காட்டுக்கு மாற்றிவிட்டார்கள். இதனால் ஜானகிக்குக் கடிதம் சேருவது நின்றுவிட்டது. இதற்குள்ளே வேணுவையும் மாற்றி

விட்டதனால் ஜானகிக்குப் பரம சங்கடமான நிலைமை உண்டாகி விட்டது.

தன் கணவன் இவ்விஷயங்கள் தெரியக்கூடாதென்று பலதரமும் வற்புறுத்திக் கூறி இருப்பதால் அதை மீறித் தன் பெற்றோர்களிடம் சொல்லவும் மனம் துணியவில்லை. என்ன செய்வாள் பாவம். வடக்கே ஒரு மூலைக்குச் சென்றுவிட்ட பின்னர் வினையாட்டுபோல ஒரு மாதத்திற்கு மேலாகிவிட்டது. தன் கணவனுக்கும் இது தகவல் தெரிவிக்க மார்க்கமின்றித் தானும் தகவலறிய மார்க்கமில்லாது பெருத்த தரும சங்கடமான நிலையில் பரிதபிக்கலாயிற்று.

பத்மநாபனுக்கு ரங்கனின் மாற்றல் விஷயம் தெரியுமாதலால் அவன் கடிதம் போடுவதற்குத் தடுமாறிக்கொண்டு நிறுத்திவிட்டான். ஜானகிக்குக் கடிதமே இல்லாமையினால் அவள் என்ன கவலைப்படுவாளோ! என்ற சங்கடமும் அவனை பாதிக்கின்றது. பெற்றோரிடத்தில் எத்தனையோ விதமாக நயத்திலும் பயத்திலும் கூறியதெல்லாம் வீணாகி ஒரே பிடிவாதமாக அவர்கள் இருப்பதானது அவனுடைய வேதனையை அதிகரிக்கச் செய்தது. என்ன செய்வதென்றே தெரியாது தத்தளித்திருக்கையில் தன் எஜமானருடன் சர்க்யூட்டு செல்லவேண்டி இருந்ததால் அவசரமாகப் போய் விட்டான்.

மனம் முற்றும் அவன் காதலியின் மீதே சென்று லயித்திருந்ததேயன்றி தன் வேலையிலும் மனம் நாட்டங் கொள்ளவில்லை. இவனுடைய எஜமானன் ஜாதியில் கருப்பு மனிதராயினும் அவருடைய நடை உடை பாவனை பேச்சு முதலிய யாவும் அசல் ஆங்கிலேயர்களைப் போலவே ஆடம்பரமாகவும் அதிகார அட்டகாஸமாயும் இருக்கும் சுவபாவமுடையவன். ஆகையினால் அவன் சதா முன் கோபியைப்போல ஜிடு ஜிடுவென்றும் முகங் கடுத்தவாறுமே இருப்பதால், பத்மநாபன் தனக்கு எடுக்கும்போதே இத்தனை பெரிய பதவியில் வேலை கிடைப்பதை எப்படியும் ஏற்றுக் கொள்வதை முக்கியமாகக் கவனித்து ஒப்புக்கொண்டுவிட்டானே

தவிர அவனுக்கு இந்த சிடுமூஞ்சியிடம் தான் எப்படி காலத்தைக் கடத்தமுடியும் என்கிற திகிலும் பயமும் எடுத்துக்கொண்டதால் லீவு என்று வாய் திறப்பதற்கும் பயம் நடுக்குகிறது.

படித்துவிட்டு அலையும் பட்டதாரிகள் ஆயிரக்கணக்கான பேர் திண்டாடும் இக்காலத்தில் தனக்கென வேலை கிடைத்த உடனே அதையோர் அதிருஷ்டமாகவே எண்ணி பத்மநாபன் ஒப்புக்கொண்டு அவனுல் கூடியவரையில் எஜமானன் முகங் கோணுதவாறு நடந்துவந்தான்.

எஜமானது குடியும், கூத்தும், ஆடலும் பாடலும் சதா கேளிக்கையில் காலத்தைக் கடத்துவதே தொழிலாகிவிட்டது. தினம் புதிது புதிதாய் பெண்கள் வந்து வீட்டில் கூத்தாடிக் களிப்பதும், இவனைப்போன்ற சகாக்கள் அதற்கு ஜோடி சேருவதும் பத்மநாபனுக்குச் சற்றும் பிடிக்கவே இல்லை. இவனுக்கென்று தனி ஜாகை கிடையாதாகையினுல் இவனும் எஜமானரின் பங்களாவிலேயே ஒரு பாகத்தில் இருப்பதால் இந்த ஆபாச லீலைகளைக் கண்டு மனம் புண்ணுகித் தவிக்கிருன்.

எஜமானனே, "என்ன சார்! நேற்று வந்த குட்டி பலே ஜோரா பாடவில்லையா! ஆட்டம் வெகு அழகாக வில்லையா! உருப்படியும் வெகு ஷோக்குதான்! ஏன்...எப்படி?" என்று பத்மநாபன் சாப்பிடும்போது கேட்பான். இந்த வார்த்தைகள் அவன் காதில் நாராசம்போல விருக்கும். அவனுல் என்ன பதில் சொல்லமுடியும்? இல்லை என்ருலோ வந்தது கோபம். ஆமாம் என்று சொல்லவோ மனம் ஒப்பவில்லை. பதிலோ சொல்லித் துலைக்கவேண்டும். ஆதலால் தந்திரமாக 'உங்களுடைய ஸெலெக்ஷனுக்குச் சொல்லவேண்டுமா? என்று மழமழ கொழகொழவென்று நிறுத்திவிடுவான்.

இம்மாதிரியான எஜமானர்களும் இருப்பார்களோ . வென்று சந்தேகப்படலாம். இதற்கும் மோசமான எஜமானர்கள் இவர்களை விட்டே ஏற்பாடு செய்யச் சொல்லும் பிரமுகர்களும் நிரம்பி இருக்கிருர்கள். இந்த சிக்கல் முக்கலான மனிதனிடம் அகப்பட்டுக்

கொண்டு திண்டாடும் பத்மநாபனின் மனமோ பறக்கிறது. எந்த விதமாக ஜானகிக்கு இவன் தகவல் அனுப்புவான் பாவம்! நாட்களோ விஷம்போல ஏறிக்கொண்டு செல்கின்றன. ரங்கநாதனுக்கு கடிதமெழுதி எப்படியாவது லீவு வாங்கிக்கொண்டு சென்று ஜானகியைப் பார்த்துத் தகவல் கொடுத்து வரும்படித் தெரிவித்தான்.

அதிர்ஷ்டகாலம் கூடி வரும் சமயமாயின் எல்லாம் மேலே மேலே கூடும். அதிர்ஷ்டக் குறைவு காலம் நேருமாயின் எந்த காரியத்தில் கை வைக்கிறார்களோ அத்தனையும் வீணாகித் தீமையாகவே முடிந்துவிடும். இவ்விரண்டும் உலகவியல்பல்லவா! ரங்கநாதனுக்கு இவன் கடிதமெழுதிப் போட்ட அன்றே இவனுக்கோர் கடிதம் வந்தது.

அதில் ரங்கநாதனுக்கு கடுமையான (டைபாய்டு) விஷ ஜுரம் கண்டு மிகவும் அதிகமாகிவிட்டதால் ஆஸ்பத்திரிக்குக் கொண்டுபோய் விட்டதாயும் அவன் மனைவி ப்ரஸவித்து ஊரிலேயே சீக்காகப் படுத்திருப்பதாயும் இத் தகவலை தனக்குத் தெரிந்த ஒருவரைக் கொண்டு ரங்கநாதனே தெரிவிக்கச் சொன்னதாயும் கண்டிருந்தது.

இச்செய்தி யறிந்ததும் மனம் துடித்தது. ரங்கநாதனைப் பார்க்கவேண்டுமென்ற ஆசையும் விசனமும் அதிகரித்தது. தன் பொருட்டாக அவர்கள் செய்துள்ள உபகாரத்திற்கு ஈடு செய்வதென்றால் விலையுண்டா! அத்தகைய புனித தம்பதிகளுக்குக் குணமாக வேண்டுமே! என்று கடவுளை பிரார்த்திக்கின்றான்.

"நான் வந்த இரண்டு மாதத்திற்குள் லீவு கேட்டால் எப்படி யார் தான் கொடுப்பார்கள்? இதை விட்டு விட்டுப் போகலாம் என்றாலோ இம்மனிதன் சரியான நற்சாக்ஷிப் பத்திரம் கொடுக்காமல் இனி இவன் வேலைக்கே லாயக்கில்லை என்றல்லவோ சொல்லி விடுவான். தந்தையோ இருந்த சொத்துக்கள் முற்றும் பாழாகிக் கடனும் காட்சியுமாக உட்கார்ந்திருக்கிறார். இனி நான் எத்தனை பிரயத்தனம் செய்தாலும் எடுத்த உடனே பெரிய வேலை கிடைக்

குமா! இதில் மெல்ல நிலைத்துவிடும் மார்க்கம் கிடைத்துவிடுமாயின் நன்ருக விருக்கும். என்ன செய்வது?'' என்ற பெருங் குழப்பம் தினே தினே இவனைச் சுற்றிக்கொண்டது.

சதா தன் காதலியின்மீதும் நண்பர்கள் மீதும் நினைவாகத் துடிக்கின்ருன். பெற்ருேர்களுக்கு இவன் வேலைக்குப் போவதில் சற்றும் பிடித்தமே இல்லை. வரதக்ஷணையின் மீதே நினைவாக விருப்பதால் தினம் திட்டியவாறு கடிதங்கள் வந்துகொண்டே இருக்கின்றன. அவைகளையும் அலக்ஷியம் செய்தான். "ஜானகி என்னைப் பற்றி வித்யாசமாக நினைத்துக்கொண்டுவிட்டாளோ...கள்ளன் கபடன் என்று வெறுக்கிருளோ!

சீச்சீ...இனி யாருக்குப் பயப்படவேண்டும். நேரில் அவள் பிறந்த வீட்டு விலாசத்திற்கே எழுதிவிடுவோம். அவள் பெற்ருேருக்குத் தெரிந்தாலும் தெரியட்டும் இதனுல் என்ன? என் தலையா போய்விடும். அப்படி வரும் விபத்தைத் தான் பார்த்துக்கொள்வோம்'' என்று தைரியமாகத் துணிந்து ஒரு கடிதம் விவரமாக எழுதி அதை ஜானகியின் விலாசத்திற்கே போட்டுவிட்டுப் பதிலை வெகு ஆவலுடன் எதிர்பார்த்துக்கொண்டிருந்தான்.

மூன்று தினங்கள் சென்றதும், ரிஜிஸ்டர் கடிதமாகையினுல் இவனுக்கே "விலாசதார் இல்லை'' என்று திரும்பி வந்துவிட்டதைக் கண்டு அபாரமான கலக்கமும் வேதனையும் அடைந்தான். "அவர்கள் அவ்விலாசத்தில் இல்லாது எங்கே போயிருப்பார்கள்.... ஒருகால் நம் பெற்ருேர்கள் ஏதேனும் கை வரிசைகளைக் காட்டி விட்டார்களோ!'' என்று பலவிதம் குழப்பமடைந்து ஏக்கம் பிடித்துப் போய் விட்டான்.

ஜானகிக்கோ நாம் முன்பு தெரிவித்தபடி தன் ஆப்த சிநேகிதை ஊருக்குச் சென்றதுமே தனக்கு ஏதோ பெருங் குறைவு ஏற்பட்டுவிட்டதாக எண்ணிவிட்ட சமயம், தன் பிதாவையே மாற்றி விட்டதானது இவளை முற்றிலும் துயரக்கடலில் மூழ்கிவிட்டது. இனி தான் எந்த வழியில் தன் காதலனின் க்ஷேமத்தையறியக் கூடும் என்று அபாரமான கலக்கத்தை யடைந்துவிட்டாள்.

சிறிய விசனம் ஒன்று இருப்பின் அதுவே தலைக்கு மேல் பாரமாக மக்களுக்குப் பெருஞ் சுமை போலத் தோன்றும். உண்மையில் ஆள் தாங்கமாட்டாததும் கனவிலும் கருதாததுமான பேரிடி போன்ற விபத்தே வந்துவிட்டதென்றால் அச்சமயம் அவர்களின் நிலைமை எங்ஙனம் விவரித்தல் கூடும். தன் காதலனின் தகவலறியாததும் அவனைப் பிரிந்த பிரிவாற்றாத் துயரமுமே பெரிதாக பாதித்து நாளுக்கு நாள் உருகி மெலிந்துகொண்டு வருகையில் அவளுக்குத் தான் கர்ப்பவதியாகிவிட்டது மின்சார சக்தி தாக்குவதுபோலான உணர்ச்சியை யளித்தது. அந்தோ! அவ் விளந்தளிர், பூங்கொடி போன்ற பாவை, அப்படியே துவண்டு தன்னிரையே யழிந்து இதுவே தன் முடிவு என்று தீர்மானமாக திட்டங்கட்டிக்கொண்டு புழுவெனத் துடிக்கின்றாள். எழுந்து நிற்கவும் சக்தியின்றி படுக்கையுடன் படுக்கையாக ஆய்விட்டாள்.

ருக்மணிக்கு ஜானகியின் இத்தகைய துயரத்தின் காரணம் தெரியாதாகையினால் தான் வாழாவெட்டி என்கிற ஓர் பதத்திற்கு உரியவளாகிவிட்ட விசனந் தாங்காமலேயே இங்ஙனமிருப்பதாக நினைத்தாள். அதோடு சுகந்தாவைப் பிரிந்ததால் பின்னும் கஷ்டமாகிவிட்டது என்று நினைத்துத் தேறுதல்கள் சொல்லி வந்தாள்.

ஜானகி தனக்குக் கருநோய் கண்ட நாளாக இவ் விஷயத்தை தன் தாயிடம் சொல்லிவிடலாமாவென்று பலதரம் எண்ணுகிறாள். பின்னும் தன் கணவன் சொல்லிய வார்த்தைகளை எண்ணியும் அவன் மீண்டும் விரைவில் வந்துவிடுவான் என்ற தைரியத்தினாலும் பேசாதிருந்துவிட்டாள்.

அவள் எண்ணியதொன்றும் ஈசன் நடத்துவதொன்றுமாக ஆகிவிட்டது. நாட்கள் ஓடி மறைந்துகொண்டே செல்வதால் ஜானகியின் திகில் அதிகரித்துக்கொண்டே வருகிறது. இவள் தாயார் ருக்மிணிக்கும் இவளுடைய மாறுட்டங்களிலிருந்தும் தேகக் குறிப்புகளிலிருந்தும் இவளிடத்தில் சந்தேகம் தோன்றி சிறுகச் சிறுக பெருந் தீ போன்று மனத்திற் சொல்லொணு வேதனையும் பேரிடி இடித்துவிட்டது போன்ற அதிர்ச்சியும் உண்டாகிவிட்டன.

பழியோரிடம் பாவமோரிடம் என்பதுபோன்று எப்போதும் திடீரென்று குற்றம் நிரபராதிகளின் மீதுதான் தோன்றும். அதே போல ருக்மிணியின் சந்தேகம், மகா பரிசுத்தவதியான ஜானகியின் சந்தோஷத்தையும் க்ஷேமத்தையுமே கோரி உதவி செய்த சுகந்த வல்லியின் மீதும் அவள் கணவனின் மீதுந்தான் பாய்ந்தது.

"ஐயோ! அவளை மகா நல்லவள் என்று நம்பி இருந்ததற்கு மாருக ஏதோ மோசம் விளைந்துவிட்டதே! என் குடிக்கு அனர்த்தத்தை விளைவிக்கவா அப் பாதகி இவ்விதம் நேசங்காட்டி உறவாடிக் குலாவினுள்! அவள்தான் மதிகெட்டு நடந்தாலும் இவளுக்கு அறிவு எங்கே போய்விட்டது? இந்த சதியாலோசனைக்காகத்தான் இரவு பகல் அவ்விடத்திலேயே இருந்தாள்போலிருக்கிறதே! ஐயோ! நான் இந்தவிதமான ஓர் அவமானத்திற்கும் ஆளாகப்போகிறேன் என்று நினைக்கவே இல்லையே! ஏற்கெனவே அபவாதத்தைக் கூறும் மனிதர்களுக்கு இந்த அனியாயமும் தெரிந்துவிட்டால் நான் எவ்விதம் உயிர் வாழ்வேன்? நான் என் பர்த்தாவுக்கு என்ன பதில் கூறுவேன். என்னுல் சகிக்கமுடியவில்லையே! "ஈசா! இதொரு சோதனையை எனக்காக மிச்சம் செய்து வைத்திருந்தாயா!'' என்று அபாரமான திகிலும், குழப்பமும், கூறத்திறமற்ற சங்கடமும் அடைந்து தவிக்கிருள்.

இதே வேதனையினுல் ருக்மிணியின் மனம் நொந்து தேகமும் மெலிந்துகொண்டே வருகிறது. இந்த அக்ரமத்தைத் தான் எவ்விதம் ஜானகியிடம் கேட்டுத் தெரிந்துகொள்வது என்ற ஆத்திரமும் கோபமும், லஜ்ஜையும் பாதிக்கின்றன. என்ன செய்வதென்று தோன்ருது திகைத்துப்போய்விட்ட ரகஸியத்தை மகா பரிசுத்தவதியும் மானியுமாகிய ஜானகி அறியாமலில்லை. தன் பொருட்டுத் தன் பெற்ருேர்கள் அடையும் துன்பத்தையும் வேதனையையும் முற்றிலும் தெரிந்திருப்பதால் இனி இந்த ரகஸியத்தை ஒளிப்பதில் பயனில்லை. இதன் உண்மையை அறியாது அவர்கள் என்மீது விகல்பமாக நினைக்கும்படியான சந்தேகத்திற்கு இடங்கொடுக்கலாகாது என்று தவித்துக்கொண்டிருக்கையில் ருக்மணி ஜானகியிடம் நெருங்கி "ஜானகி! என்னுல் இனி மானமாக வாழ முடியாது. நான் எப்படியா

வது ப்ராணனை விட்டுவிடவேண்டியதுதான். இம்மாதிரி உன் புத்தி அழிந்து பாழாகிவிடுவாயென்று நான் கனவிலும் கருதவில்லை. அந்தப் பாதகியும் நம் குடும்பத்தைக் கெடுக்க வேர்ப்புழுவாக வருவாள் என்று நான் ஒருபோதும் நினைக்கவில்லை...என்று மேலே சொல்வதற்குள் ஜானகி இடைமறுத்து,

"அம்மா! அவசரப்படாதே! எல்லாம் வல்ல இறைவனை மறக்காதே! யாவும் அவன் செயல். நிரபராதியான சுகந்தாவை நீ திட்டுவது சற்றும் நியாயமில்லை. நடந்ததை நானே கூறிவிட எண்ணினேன். ஆனால் என் பர்த்தாவின் உத்திரவைப் பெற்றுத் தான் கூறுவது என்று முடிவு கட்டிக்கொண்டேன். (நடந்த சகல விஷயங்களையும் கூறி) இதோ! என் பர்த்தா எழுதிய கடிதம். இதைப் படித்த பிறகு உங்கள் மனம் சாந்திபெறும் என்று தான் இதை அவர் கிழித்துவிடும்படி எழுதி இருப்பினும் நான் அங்ஙனம் செய்யாமல் வைத்திருக்கிறேன். இனி என்மீதும் என் சினேகிதையின் மீதும் அபாண்டமாக நினைக்காதே! எல்லாம் காலச்சக்கரத்தின் சுழல்" என்று கண்ணீர் பெருகக் கூறினாள்.

இதைக் கேட்ட ருக்மணிக்கு தூக்கி வாரிப்போட்டது. ஒரு புறம் சந்தோஷமும் ஒரு புறம் அபார பயமும் ஒருங்கே கூடி ஏக காலத்தில் வதைக்கின்றன. "ஹா!...ஜானகி! மகா உத்தமியின்மீது நான் அடாத பழி நினைத்துவிட்டேனே! சுகந்தாவின் தயவினால் உன்னை உன் கணவன் கண்டு களித்ததை எண்ண உடல் பூரிக்கின்றது. சினேகிதர்கள் என்றால் இப்படியல்லவோ இருக்க வேண்டும்.

ஜானகி! உன் கணவர் உண்மையில் இம்மாதிரி திரும்பியதை நினைக்க என்னையறியாது சந்தோஷத்தில் மிதக்கச்செய்கிறது. இச் செய்தியை உன் பிதா அறியவேண்டும்...இக்கடிதம் அவரே எழுதியதா! அப்போது சென்றிருந்த மூன்று தினங்களும் அவருக்காகவா சென்றாய்...என்ன ஆச்சரியம்...உன் மாமியாரும், மாமனாரும் வந்தார்களா! அவர்களையா ஏமாற்றியனுப்பிவிட்டாள்...என்று திகைப்பும் வியப்பும் அடைந்து மெய்ம் மறந்துவிட்டாள்.

உடனே ஓட்டமாக ஓடி தன் கணவன் வேணுவிடம் விஷயங்களைத் தெரிவித்துக் கடிதத்தையும் காட்டினாள். வேணுவும் அவளைப்போலவே பிரமித்தான். ஜானகியின் கஷ்டம் ஒரு சிறிது வடிந்ததெனினும் இப்போதுள்ள மாறுதல் எந்த விதத்தில் கொண்டு விடுமோ! என்று திகைத்தான். "அடாடா! பைத்தியக்காரன் நமக்குத் தெரிந்தால் என்ன ஆபத்து வந்துவிடும் என்று எண்ணினான். மந்திரமாவது மாயமாவது எவன் என்ன செய்யமுடியும்? அவனை ஒரு கை பார்த்துவிடமாட்டேனா? இத்தனை அன்புடன் அவன் இருப்பான் என்றாவது, இந்த ஆப்த சினேகிதர்கள் இத்தகைய அரிய உபதேசமும் உதவியும் செய்வார்கள் என்றாவது, இவர்களே இக்காதலிருவருக்கும் சினேகிதர்கள் என்றாவது நாம் நினைத்தோமா! என்ன ஆச்சரியம். என்ன வேடிக்கை." என்று வியந்தவாறு பெண்ணிடம் வந்தான்.

ஜானகி வெட்கமும் துக்கமும் பாதிக்கப்பட்டவளாய் மிக்க வேதனையுடன் படுத்திருந்தாள். "ஜானகீ! செல்வீ! இந்த உண்மையை உரைக்காது இவ்வாறு வீண் கவலை யாரேனும் படுவார்களா! இம்மாதிரி ஏன் கவலைப்பட்டு நீ நாளுக்கு நாள் மெலிந்து வருகிறாய்? கவலையே படாதே! கடவுளை நம்பு. இம்மாதிரி வந்துவிட்டதே நம்மைச் சேர்த்துக்கொள்வார்களோ, மாட்டார்களோ வென்று கலங்காதே! இனி நானும் ஒரு கை பார்த்துக்கொள்கிறன். நீ இவ்விதம் கண்ணீரும் கலக்கமுமாகவிருந்தால் வயிற்றிலுள்ள சிசுவும் சரியாக வளராமலும் கவலையே பிண்டமாகவும் ஆய்விடும். ஆகையினால் நீ சாதாரணமாகத் தெம்பாயிரு." என்று தேறுதல் கூறினான்.

ஆண் பிள்ளைகளுக்குள்ள கவலை ஒரு தினுசு; பெண்களின் கவலை யொருவிதம். 'என் தகப்பனார் எத்தனை தேறுதல்கள் சொல்லியபோதிலும் இந்த ரகஸியத்தைப் பிறர் அறிந்தால்,மாமியார் வீட்டில் தள்ளி வைத்திருக்கும் பெண் கர்ப்பவதியாகிவிட்டாள் என்ற பழிதான் கேட்க நேரும். என் கணவன் இருப்பிடமும் தெரியவில்லையே! என்ன செய்வேன்?' என்கிற பெருங் கவலை ஜானகியை வாட்டி வதைக்கிறது.

புதிதாக மாற்றப்பட்டு வந்திருக்கும் ஊராகையினால் அண்டை அயலுக்குத் தெரியவேண்டியதும், வம்பு பேசவேண்டியதுமான உபத்திரவமில்லாது சற்று நிம்மதியாயிற்று. எனினும் தன் கணவனிடமிருந்து ஒரு விதமான தகவலும் கிடைக்காமையினால் அபாரமான விசனமும் தன் புருஷனின்மீது சிறிது கோபமும் அவநம்பிக்கையும் உண்டாகியது. புருஷர்களே இவ்விதம்தான் செய்வார்கள் போலும் என்று வெறுப்பும் கொண்டாள். தன்னுடைய இந்த ரகஸியம் மாமியார் வீட்டிற்குத் தெரிந்தால் அவர்களுக்குள்ள ஆத்திரத்தால் வேண்டுமென்றே பஜீத் செய்துவிடுவார்களே! என்கிற பயம் தன்னை மீறி பிடித்துக்கொண்டது. தன் தகப்பனார் இதைப் பற்றி தன் மாமியார் வீட்டாரிடம் சொல்லாமலிருக்கவேண்டுமே என்கிற திகிலும் வாட்டுவதால் தகப்பனாரிடம் சென்று "இவ்விஷயங்கள் உங்களுக்குத் தெரிந்ததாக வெளியில் காட்டிக்கொள்ள வேண்டாம்" என்று கெஞ்சிக் கேட்டுக்கொண்டாள்.

நாட்கள் பல சென்று மறைந்து, இடையில் நான்கு மாத காலமாகிவிட்டன. ஜானகியின் துயரமோ நாளுக்கு நாள் பெருகிக்கொண்டே வருகின்றது. கடைசியில் அவள் ஒரே துணிகரமான தீர்மானத்திற்கு வந்தாள். இது நன்மையாயினும் சரி! தீமையாயினும் சரி என்று ஒரே உறுதியுடன் துணிந்துவிட்டாள். ஒரு கடிதமெழுதி தன் கணவன் பெயருக்கு, மாமியார் வீட்டு விலாசத்திற்கே போட்டுவிட்டாள்.

கடிதத்திற்குப் பிறகு நிமிடத்திற்கு நிமிடம் அவளையறியாத திகிலும் மனப்பிராந்தியும் அதிகரித்துவிட்டன. "கடிதம் ஒருகால் மாமியார், மாமனார் கையில் அகப்பட்டு விடுமோ! அவர்கள் என்ன செய்துவிடுவார்களோ!' என்று பயந்துகொண்டே இருக்கையில் இவளுடைய பயத்திற்குத் தக்கவாறு ஜானகியினுடைய நாத்தனார் ஒரு நாளுமில்லாது திருநாளைப்போல அங்கு வந்து நின்றதைக் கண்டதும் யார்தான் திடுக்கிடமாட்டார்கள்! யாருக்குத்தான் பயமும் குலைநடுக்கலும் உண்டாகாது?

அவளைக்கண்ட ருக்மிணி முதலில் கதிகலங்கிவிட்டாள். வந்தவளோடு பேசவும் தோன்றவில்லை. விசாரிக்கவும் மறந்தாள். தன்

ஜானகியின் பரிதாப உருவமும், எதிர்கால வாழ்க்கை எவ்விதம் முடியுமோ என்கிற பயமுந்தான் முதலில் பாதித்ததாதலால், கல்லாய்ச் சமைந்தாள். வந்தவளும் "என்ன மாமி! சவுக்யமா! ஜானகி எங்கே?" என்று கேட்டவாறு விநாடிப் பொழுதில் சுற்றுமுற்றும் கண்களைச் சுழற்றிப் பார்த்தாள்.

கூடத்து அறையில் படுத்திருக்கும் ஜானகிக்கு இங்கு நடந்த சம்பாஷணை காதில் பட்டதும் மெல்ல எட்டிப் பார்த்தாள். அங்கு தான் வெகு வருடங்களுக்கு முன் கல்யாணத்தில் கண்ட தன் நாத்தனர் திடீரென்று இங்கு வந்திருப்பதைக் கண்டதும் ஏதோ விபரீதத்திற்குத் தான் இம்மாதிரி ஈசன் சோதனை செய்துவிட்டான் என்று தெரிந்துகொண்ட நிமிடமே தன்னை மீறிய பயத்தினுலும், அபாரமான மன அதிர்ச்சியினுலும் துவண்டுபோய் கட்டிலின்மீது ஸ்மரணையற்று வீழ்ந்தாள்.

## 19-வது அதிகாரம்

### படக்காட்சிச் சாலை—இடர் கோய்யும் வேளை

நமது அச்சுதன் கதவின் பக்கம் வந்து நின்ற அழகியைக் கண்டு அபாரமான பயமும், மன வெறுப்பும் கொண்டு அப்பக்கம் பார்க்கவும் விருப்பமற்று வேப்பிலை தின்பவன்போல முகத்தைச் சுளித்தவாறு கட்டிலில் குப்புறப் படுத்துக்கொண்டான். "ஏதோ போதாக் காலத்தினல் தான் இந்த விபரீத இடத்தில் வந்து அகப்பட்டுக்கொண்டோமா" என்ற கலக்கம் பெரிதாக உண்டாகிவிட்டது.

அத்தகைய மனமாற்றத்துடன் அச்சுதன் சிறிது நேரம் தத்தளித்துப் புரண்டுகொண்டிருக்கையில் அவ்வறைக்கு வெளியில் ஏதோ பரபரப்பாகப் பேசும் சப்தம் கேட்டது. உடனே அச்சுதன்

அந்த வார்த்தைகளை கவனிக்கத் தொடங்கினன். "ஐயோ! பாவம் என்ன கஷ்டமோ! குடும்பத்தில் தொல்லையோ! அல்லது எந்த விதமான விபத்து நேர்ந்துவிட்டதோ! அதைச் சகிக்கமாட்டாது சிறு பெண் பாவம். தற்கொலை புரிந்துகொள்ளத் துணிந்து விட்டாள்.

ஆம்! ஆம். உயிர் இன்னும் கொஞ்சம் இருக்கிறது. மெல்ல ச்வாஸம் வருகிறது. நமது வைத்தியரை எழுப்புங்கள்." என்று ஒரு குரல் கேட்டது. விவரம் புரியாத இவ்வார்த்தையைக் கேட்டதும் அச்சுதனுக்கு ஒருவிதமான பரபரப்பும் அது என்ன வென்று அறியவேண்டுமென்கிற ஆவலும் ஒருங்கே கூடி எழுந்தன. உடனே தான் தன் படுக்கையிலிருந்தெழுந்து நாற்புறமும் உற்று நோக்கினன். தான் சற்று முன்னல் கண்ட இளமங்கை கதவருகில் இல்லாததைக்கண்டு வெகு சந்தோஷத்துடன் அவ்வறையை விட்டு வெளியே வந்தான்.

இவ்வறைக்கு பத்து கஜ தூரத்திற்கப்பாலுள்ள ஒரு பெரிய கூடத்தில் ஆண்களும், பெண்களும் சுற்றி வளைத்துக்கொண்டு ஒரு வர் பேசுவது ஒருவருக்குப் புரியாமல் இரைச்சலும், தடபுடலுமாக விருப்பதை நோக்கி அவ்விடத்திற்கு ஓடி ஜனக் கும்பலுக்குள் தானும் புகுந்து பார்க்கையில் அங்குள்ள காக்ஷியினல் மின்சாரம் தாக்கப்பட்டவன்போல அலறி திடுக்கிட்டு பிரமித்து நின்றுவிட் டான். அவன் மனம் கட்டுமீறி அபாரமான கலக்கத்துடன் பல வித எண்ணங்களில் குழம்பிப்போய் தத்தளிக்கின்றது.

ஈர உடையுடன் சவத்திற்கொப்பாக அங்கு கிடத்தப்பட் டிருக்கும் பொற்கொடி போன்ற சந்திராவின் அருகில் ஓடி பக்கத்தி லமர்ந்து அங்குள்ளவரை நோக்கி, "ஐயா! இப்பெண்மணிக்கு இவ்வாபத்து எவ்விதம் நேர்ந்தது? இதைத் தாங்கள் எவ்விதம் அறிந்தீர்கள்? இச்சமயம் எவ்வாறு நீங்கள் காப்பாற்றினீர்கள்? இவர்கள் குடும்பத்தை நான் மிகவும் அறிவேனகையால், என் மனம் மிகக் கவலைப்பட்டுத் தவிக்கின்றது. தயவு செய்து சொல்லுங்கள்" என்று தன் மனத்துள்ளடங்கியிருக்கும் கலக்கத்துடன் கேட்டான்.

24

இதுகேட்ட அங்கிருந்த ஒரு கனவான் அச்சுதனை நோக்கி, "இவர்களை உங்களுக்கு நன்ருகத் தெரியுமா? ஐயோ பாபம்! இந்த பெண்ணிடத்தில் நான் மிகப் பரிதாபப்படுகிறேன். நாங்கள் அருகில் 5 மைல் தூரத்திலிருக்கும் மாரியம்மன் கோயில் திருவிழா பார்த்துவிட்டுத் திரும்பி வருகையில் நிலவு வெளிச்சத்தில் பாதைக்கு சிறிது தூரத்தில் தபீர் என்று ஒரு ஓசை கேட்டது. அவ்வோசை கேட்பதற்கு ஒரு விநாடி முன்பு "ஆ கடவுளே! என்னை ஏற்றுக் கொள்." என்று ஒரு குரல் கேட்டது. அக்குரலைக் கேட்டு நாங்கள் அசைவற்றிருக்கும் நிமிடத்திலேயே அந்த திடீர் என்னும் சப்தம் கேட்டதால் இங்கு ஏதோ ஒரு விபரீதம் நடக்கின்றது. என்பதை ஊகித்துக்கொண்டு அந்த சப்தம் வந்த திக்கே நோக்கி ஓடினோம்.

அங்கு ஒரு பெரிய கிணற்றில் கயிறு தொங்கிக்கொண்டிருப்பதையும் ஜலம் தளும்பிக் கொண்டிருப்பதையும் கண்டு அந்தக் கயிறை ஆட்டிப்பார்த்தோம். அது கனமாக விருந்தது. யாரோ கிணற்றில் விழும்பொழுது அதைச் சுறுக்கிட்டுக்கொண்டிருக்க வேண்டுமென்பதை க்ஷணத்தில் ஊகித்துக்கொண்டு இமை கொட்டும் நேரத்திற்குள் நான் கிணற்றில் குதித்து இப்பெண்மணியைத் தூக்கிச் சுறுக்கை அவிழ்த்து, மற்றவர்களுடைய சகாயத்தினுல் கரைக்குக் கொண்டு சேர்த்தேன்.

மனத்தில் அபாரமான கவலையும், கழுத்தில் சுறுக்கும், கிணத்துத் தண்ணீரில் ஏற்பட்ட திண்டாட்டத்தினுலும், மூச்சு இருக்கின்றதா இல்லையா என்ற சந்தேகமே எங்களுக்கு உண்டாகி விட்டது. எங்களால் கூடியவரையில் கைகால்களை சூடுரைக்கும்படி நன்ருகத் தேய்த்து ஆட்டிப் பார்த்தோம். மூச்சு மாத்திரம் சிறிது வருவதைக் கண்டோம். இப்பெண்மணி யாரோ? எக்காரணம் பற்றி இப்படித் தற்கொலை புரிந்து கொள்ளத் துணிந்தாளோ என்றது ஒன்றும் தெரியாததினுல், என்ன செய்வதெனத் தோன்ருமல் சிறிது தயங்கினோம். எதிரில் தெரிந்த ஒரு சிறிய வீட்டில் விசாரித்து, இவளுடைய வீட்டில் விட்டு விடலாமா என்றும் யோசித்தோம். ஆனுல், இவள் வீட்டிலேற்பட்ட ஏதோ தொல்லையினுல்தான் இம்மாதிரி துணிந்திருப்பாள்; மீண்டும் அங்கு கொண்டு

சேர்த்தால் என்ன நேருமோ என்றும் தோன்றியது. ஆகையினால் முதலில் இவளை மூர்ச்சை தெளிவிக்க வேண்டியது முக்கியமாக விருந்தமையாலும், இவள் பிரக்ஞை பெற்ற பிறகு இவளையே கேட்டுச் செய்யலாம் என்றபடியாலும், இவ்விவரத்தை எங்கள் எஜமானருக்குத் தெரிவிக்க வேண்டியும் இங்கு கொண்டு வந்து விட்டோம்'' என்றார்.

அதற்குள் வைத்தியரும் வந்து விட்டார். அச்சுதன் இவ்விடத்தைப் பற்றி மிகவும் வித்தியாசமாக நினைத்திருப்பதாலும், எஜமானனிடம் தெரிவிக்க வேண்டுமென அவர்கள் கூறியதாலும் முன் கொண்ட சந்தேகம் பின்னும் பன்மடங்கு ஊர்ஜிதமாகத் தோன்றியது. உடனே அருகிலிருப்பவனை நோக்கி, "ஐயா! நான் இவ்வாறு கேட்கிறேன் என்று ஆயாசப் படக்கூடாது. தாங்கள் இப் பெண்மணியைக் கொண்டு வந்ததுபோல, என்னையும் உங்கள் கூட்டத்தினரில் ஒரு சிலர் இங்கு அழைத்துக்கொண்டு வந்தார்கள். இந்த இடத்தின் விவரமோ எனக்கு ஒன்றுமே புரியவில்லை. நீங்கள் எஜமானன் என்கிறீர்கள்: உங்களுடைய எஜமானர் யார்? இந்த இடம் எந்த இடம்? இத்தனை பேரும் ஒன்றாகக் கூடியிருக்கிறீர்களே, நீங்கள் யார்? நீங்கள் ஒரே குடும்பத்தினரா? தயவு செய்து எனக்குத் தெரிவிக்க வேண்டுகிறேன்'' என்று கெஞ்சிக் கேட்டான்.

அச்சமயம், ஒரு பெரிய மனிதர் மிகவும் மரியாதையாயும் சிரித்த முகத்துடனும் அச்சுதன் கூறியவற்றைக் கேட்டுக்கொண்டே அவ்விடம் வந்து அச்சுதனை நோக்கி, "ஐயா! நீங்கள் கேட்ட கேள்விக்கு நான் பதில் சொல்லத் தயாராயிருக்கிறேன். உங்களுடைய முகத் தோற்றத்திலிருந்து நீர் நினைத்திருக்கும் எண்ணம் தெட்டென வெளியாகின்றது. நீர் எண்ணுகிறபடி இவ்விடம் ஒரு கொள்ளைக் கூட்டத்தினரைச் சேர்ந்ததென்றோ அல்லது, விபரீதமான விபசார விடுதி என்றோ கனவிலும் கருதவேண்டாம். உங்களைப் போன்ற கௌரவமானவர்கள் நிறைந்த கூட்டத்தினர்தான் நாங்கள். தற்காலத்தில் உலகத்திலெங்கும் பரவிவரும் பேசும் படக் காக்ஷிகள் தயாரிக்கும் கம்பெனிக்காரர்கள் நாங்கள். தங்களுடைய முக வெட்டும், கட்டு திட்டமான சரீரமும், உயரத்திற்கேற்ற பருமனும், வசீகரமான தோற்றமும் ஒருங்கே கூடியிருப்பதனால் எங்க

ளுடைய ஆட்கள் உங்களை எங்களிடம் காண்பிக்க அழைத்து வந் தார்களே தவிர, உம்மை மோசம் செய்து ஏமாற்றுவதற்கல்ல'' என்று எஜமானர் கூறி முடிப்பதற்குள் அச்சுதன் வெகு ஆச்சரியத் துடன் “கனவானே! உண்மையிலேயே இவ்விடத்தைக் கேவல மான விடுதியோ என்று எண்ணி அபாரமான திகிலடைந்து விட் டேன். இப்பொழுதுதான் என் மனம் நிம்மதியடைந்தது. இங் குள்ளவர்களெல்லோரும் நடிப்பதற்காக வந்திருப்பவர்களா?'' என் ருன்.

எஜமானன் :—ஆம். சில பேர் நடிப்பதற்காக வந்திருக்கி ருர்கள். இன்னும் சிலர் அவர்கள் சொந்தக்காரர்கள், அவர்களின் பாதுகாப்பிற்காக வந்திருக்கிருர்கள். சில படக்காரர்களைப் போல், நான் கண்ட குப்பைகளையும் திரட்டிக் கொண்டுவந்து, பொருத்த மில்லாமல் ஆபாசப் படங்களைப் பிடித்து, தடபுடலாக விளம்பரம் செய்துவிட்டு பொது மக்களுக்கு அதிருப்தியும், வெறுப்பும் உண் டாக்கிப் பணம் பறிக்கும் நோக்கமுடையவனல்ல. எனது லாபத்தை ஒரு சிறிது கவனித்தபோதிலும் பொது மக்கள் மனத்திருப்தியுடன் அளிக்கும் ஆதரவான லாபம்தான் என்னுடைய முக்கியமான தும், உண்மையானதுமான நோக்கம். ஆகையினல் என்னல் கூடியவரையில் அந்தந்த வேஷத்திற்குப் பொருத்தமான ஆண்களை யும் பெண்களையும் தேர்ந்தெடுத்துக் கூடியவரையில் இயற்கைக்கு சிறிதும் மாறுபடாமலும், கதையின் அழகு குன்ருமலும், அரு வசியமான ஆபாச விஷயங்களை, ஹாஸ்யரஸமென்ற பெயரில் புகுத்தி அறிவாளிகளின் அதிருப்திக்குப் பாத்திரமாகாமலும் எத் தனை ஒழுங்காகத் தயாரிக்க முடியுமோ அத்தனை ஒழுங்காக சிரமப் பட்டுத் தயாரித்து வருகிறேன். எங்களுடைய முதல் படத்திற்கு சில்லரை வேஷத்திற்கு வேண்டிய ஆட்களை எல்லாம் அநேகமாக ஸ்திரீ புருஷர்களுள்படப் பொறுக்கி விட்டோம். கதாநாயகனுக் கும், கதாநாயகிக்கும் 2 ஜோடிகள் பொறுக்கி யிருக்கின்ருேம். ஆனல் என் மனதிற்கு அஜ்ஜோடிகள் அவ்வளவாக திருப்தியாக இல்லை.

மேலும் எங்கள் கம்பெனியினுடைய நோக்கமானது தொழி லாளிகளையே தான் பொறுக்க வேண்டும் என்பது கிடையாது.

தொழிலே யில்லாத எத்தனையோ பேர்களிடத்தில் அபாரமான சங்கீதமும், அபூர்வமான வசீகரத்தன்மையும், அருமையான முகவெட்டும் அவர்களே அறியாமல் பொலிந்து கிடப்பதை நான் கண்டிருக்கிறேன். அத்தகையவர்களுக்கு மனப்பூர்வமாக நடிக்க விருப்பமிருப்பின் அவர்களுடைய சொந்த மனிதருக்கும் ஆட்சேபனை இல்லாதிருப்பின் அவர்களையே கொண்டு ஏன் முதல்தரமான படம் தயாரிக்கக் கூடாது என்பதுதான் என்னுடைய கட்சி.

அச்சுதன் :—(இடை மறுத்து) ஐயா! எனக்குப் படக்காக்ஷி உலகத்தில் அனுபவமில்லை எனினும் ஏற்கனவே நடித்துப் பழகியவர்களைக் கொண்டு நடிக்கச் செய்வதைப் போன்று புதிய நடிகர்கள் நடித்து வெற்றிபெற முடியுமா; என்று சிலர் கூறக் கேட்டதுண்டு.

எஜமானர் :—ஐயா! தாங்கள் கூறியதுபோல நானும் நினைத்ததுண்டு. ஆனால் சமீப காலத்தில் தோன்றிய சில படங்களின் மூலம் அந்த சந்தேகம் நிவர்த்தியாகி விட்டது. மேல் நாட்டில் இச் சினிமாக் கலை மிகவும் உன்னத நிலைமையில் வளர்ந்திருப்பதன் காரணம் பட முதலாளிகளும நடிகர்களும் கலை வளர்ச்சியின் மீதே கவனத்தைக் கொண்டு நடத்துவதினால்தான் இணையற்ற படங்களை பூரண வெற்றியுடன் தயாரிக்க முடிகின்றது.

உமக்குப் படக்காக்ஷி உலகத்தில் அனுபவமில்லையெனினும் அனேகப் படக்காக்ஷிகளை நீங்கள் பார்த்திருப்பீர்களல்லவா? அதிலிருந்து மேல்நாட்டுப் படங்களுக்கும், நம் நாட்டு படங்களுக்கும் எவ்வளவு வித்தியாசமிருக்கின்றன என்பதை உம்போன்ற படித்தவர்கள் தெரிந்துகொள்ளக்கூடும் அல்லவா? உதாரணமாகப் பாரும். நம்முடைய படங்களில் வயதுசென்ற கிழவன் ஒருவன்வேண்டுமென்றால், சாதாரண வயதுடையவனைப் பிடித்து வெள்ளை தாடி, மீசை வைத்துக் கிழவனைப்போல வேஷம் போட்டு படமெடுக்கிறார்கள். மேல் நாட்டினரென்றாலோ, அப்படியில்லாமல் கதையிலுள்ள பாத்திரங்களுக்குத் தகுந்தவர்களையே சிரமப்பட்டுத் தேடியெடுத்துத் தயாரிக்கிறார்கள். அதனாலுண்டாகும் செலவைப் பொருட்படுத்துவதில்லை. அம்மாதிரி தயாரிப்பதில் கிழவனுடைய பாகத்தில்,

நடை, உடை, பேசும் த்வனி சகலமும் கிழத்தன்மையாகவே பொருத்தமாக அமைகின்றது. கிழவனாக வேஷம் போடும் நம் படங்களிலோ இயற்கைக்கு மாறாக குரலிலும் நடையிலும் இளமை தோன்றி படத்திற்கு தோல்வியே அளிக்கின்றது. இதுபோன்ற இன்னும் அநேக சில்லரை விஷயங்கள் சேர்ந்து பெரிய தோல்விக்குக் காரணமாகிவிடுகின்றது.

மேற்குறித்த ஊழல்கள் இல்லாமல் முதல் தரமான சமூகப் படங்கள் தயாரிப்பதற்கே நாங்கள் கங்கணம் கட்டிக்கொண்டிருக்கிறோம். ஏனெனில் பண முதலாளிகள் தாங்கள் பணம் சம்பாதிக்கும் நோக்கத்துடன் புராணக் கதைகளையெல்லாம்,—அவற்றில் முக்கியமான அம்சங்களை விடுத்து, ஆபாஸமானவைகளை அனாவசியமாகச் சேர்த்து, உத்தமமான சரித்திரங்களைக் கொலைசெய்து—மனம் போனவாறெல்லாம் படமெடுத்து உலகம் புராணப்படங்களையே வெறுக்கும்படியாகச் செய்கிறார்கள். புராணப்படங்களை எடுப்பதிலும், புராணத்திலுள்ளபடியே ஒழுங்கானபடி எடுத்திருந்தால் அவை மிகவும் வெற்றிகரமாகவே இருந்திருக்கும் தற்போது பொது மக்களுடைய அபிப்ராயம் புராணக்கதைகளிலில்லை சமூகப்படங்களில்தான் என்பதைப் பலவிதங்களிலும் நன்றாகத் தெரிந்து கொண்டேன்.

கூடியவரையில் மேல்நாட்டினரைப் போல் சரியான முறையில் படங்களைத் தயாரித்து வெற்றி பெறும் உன்னத நிலைமைக்கு நம் வடநாட்டினர்கள் முன்னணியில் வந்திருக்கிறார்களென்றே கூற வேண்டும். நடிப்புத் தொழிலிலே இல்லாமல் எத்தனையோ ஆண் மக்களும், பெண் மக்களும், விருத்தர்களும் வெகு அருமையாக நடித்து வெற்றி பெற்றிருப்பதை நோக்க நம் தமிழ்த் தாயுலகிலும் படக்கலை வளர்ச்சி என்று அவ்வாறு உயரும் என்ற ஏக்கமே எனக்கு உண்டு. அந்த குறைகளைக் கூடுமான வரையில் களைந்து மேம்பட நடத்தவே நான் முயற்சி செய்து வருகிறேன். உமக்கு என்னாலானவைகளையெல்லாம் செய்கின்றேன். நீர் இதில் முக்கிய நடிகராக நடிக்கப் பிரியப்படுவீர் என்று நான் நம்புகிறேன். இப்பொழுது மிகவும் அகாலமாகிவிட்டபடியால், நன்றாக யோசித்துக் காலையில் தெரிவியுங்கள். அப்பெண்ணுக்கும் அதற்குள் நன்றாகத் தெளிந்து விடும்.

அச்சுதன் :—ஐயா! தங்களுடைய மேலான அபிப்பிராயங்களைக் கேட்க மிகவும் சந்தோஷமாமயிருக்கிறது. நம் பாரத நாட்டிலுள்ள சகல கலை வளர்ச்சிக்கும், தங்களைப்போன்ற சிரத்தையுள்ளவர்கள் சிலர் இருப்பார்களேயானால் கலைகள் மங்காமல் மெருகுடன் பிரகாசிக்கும் அல்லவா? ஆ! அதோ அப்பெண்மணிக்கு

மூர்ச்சை தெளிகின்றது. கண்ணைத் திறந்து பார்க்கின்றாள். எல்லோரும் புதிதாகவிருப்பதால் அவள் பயந்து நடுங்குவாள். மேலும் அவளை நாம் இங்கு வைத்திருப்பது சரியல்ல. அவள் எக்காரணம் பற்றித் தற்கொலை செய்யப் புகுந்தாள் என்பதை நான் ஒரு சிறிது அறிவேன். (சந்திராவின் தற்கொலைக்குக் காரணமாகிய வறுமையின் விவரங்களைக் கூறி) இக்காரணம் பற்றியே அவள் தன்னை மாய்த்துக் கொள்ளத் துணிந்தாள். இவ்விரவு முற்றும் அவள் இங்கிருப்பாளேயானால் வீண் அபவாதத்திற்கும், அவளுடைய இப்போதைய நிலைமையில் படாப்பழிக்கும் சமூகத்தினிடையே ஆளாகிவிடுவாள் என்பது நிச்சயம். ஆகையினால் தங்கள் பிரியப்படி நடிப்பதற்கு அவளும் அவள் பெற்றோரும் யோசித்து இஷ்டப்படுவார்களானால், அதற்குத் தகுந்த முயற்சியைப் பின்னர் தாங்கள் செய்வது நலம். ஏற்கனவே மனம் நொந்த இப்பெண்ணை இன்னம் பழிக்கு இலக்காக்காமல் அவளுடைய வீட்டில் தகுந்த பந்தோபஸ்துடன் கொண்டுவிட்டு நடந்த விவரத்தைக் கூறிவிடுவது மிகவும் உசிதமானது. தங்களுக்குத் தெரியாதது ஒன்றுமில்லை.'' என்று வணக்கமாகக் கூறினன்.

இதைக்கேட்ட எஜமானரும் ஆமோதித்து, அச்சுதனின் உசிதமான அறிவைப் பாராட்டி, அவ்விதமே செய்ய இசைந்தார். அச்சமயம் சந்திரா கண்ணை நன்றாகத் திறந்து பார்த்து "ஆ! நான் எங்கிருக்கின்றேன். நான் பிழைத்துக்கொண்டுவிட்டேனே. என் பிராணன் இன்னும் போகவில்லையே. கிணற்றிலா இருக்கிறேன்! (நாற்புறமும் சுற்றித் தடவி) இல்லை, இல்லை! நான் ஒரு கட்டிடத்திலல்லவா இருக்கிறேன். ஐயோ? என் கழுத்தில் சுறுக்கிட்ட கயிறும் எங்கே போய்விட்டது? இவர்கள் யார்? நீங்கள் யார்? நான் எங்கிருக்கிறேன்?'' என்றெல்லாம் பரிதாபகரமாகக் கேட்டபடியே மிரளமிரள விழித்தாள்.

அச்சுதன் சந்திராவின் அருகில் அமர்ந்து, "அம்மணீ! பயப்படவேண்டாம். தாங்கள் மிகவும் பந்தோபஸ்தான விடத்தில் தானிருக்கின்றீர்கள். தங்களுக்கோ, தங்களுடைய கற்பிற்கோ ஒருவிதமான ஹானியுமேற்படாது. தாங்கள் வறுமையின் கொடுமையினால் தற்கொலை புரிந்துகொள்ளத் துணிந்தும், கடவுளுக்கு அது சம்மதமில்லை என்பதனால்தான் வேறு வழியில் உங்களைக் காப்பாற்றி உதவி புரிய முன்வந்திருக்கிறார். நீங்கள் சற்றும் கவலைப்படவேண்டாம். நான் உங்களுக்கு அறிமுகமானவனாகவே இருக்கிறேன். நினைத்துப் பாருங்கள்'' என்று வெகு வினயமாகக் கூறினன்.

இதைக்கேட்ட சந்திரா அச்சுதனின் முகத்தை ஆழ்ந்து நோக்கி, "ஆம். ஆம். நேற்று எங்கள் வீட்டை விலைக்கு வாங்கிக்

கொள்வதற்காக வந்த கனவானல்லவா தாங்கள்! தாங்கள் இங்கு எப்படி வந்தீர்கள்? நான் எப்படி வந்தேன்? என்னை சாகாமல் தாங்களா தடுத்தீர்கள்? தயவுசெய்து விவரத்தைக் கூறுங்கள்"

அச்சுதன்:—அம்மணீ! தங்களைக் கடவுள் இதோ, இவர்களின் மூலமாய்க் காப்பாற்றினர். நாமிருவரும் நம்மையே அறியாதபடி இந்த கனவானின் பாதுகாப்பில் கடவுள் சேர்த்திருக்கிறார். மற்ற விவரங்கள் பிறகு பேசிக்கொள்வோம். தாங்கள் பிரியப்பட்டால் இரவு இங்கு தங்கி விடியற்காலை வீட்டிற்குப் போகலாம். இல்லை யேல் இப்பொழுதே வீட்டிற்கு கொண்டுவிட ஏற்பாடு செய்திருக் கிறது. நீங்கள் பயப்படாமல் உங்களபிப்பிராயத்தைத் தெரிவி யுங்கள்.

சந்திரா:—ஐயா! நான் இப்பொழுதே வீட்டிற்குப் போக வேண்டும். நான் இரவு தங்குவதால் எவ்வளவு தீங்கு நேரும் என் பது நீங்களெல்லோருமறிந்த விஷயம். ஐயோ! எனக்கு மிகவும் பய மாக விருக்கின்றது!

எஜமானர்:—அம்மணி! பயப்படாதீர்கள். நானே தங்களுடன் வந்து தங்கள் பெற்றோர்களிடம் நடந்த விவரங்களை ரகஸ்யமாகக் கூறி உங்களை விட்டு விட்டு வருகிறேன். ஏனென்றால் தற்கொலை புரிந்துகொள்வதும் சாமான்யமானதல்ல. இது சர்க்காருக்குத் தெரியுமாயின் உடனே உங்களைக் கைதியாக்கி விடுவார்கள். ஆகை யால் இந்த விஷயம் வெகு ரகஸ்யமாக இருக்கவேண்டும். நீங்கள் கொஞ்சமும் பயப்பட வேண்டாம்.........அடேய். காரைக் கொண்டுவா. என்று தன் பணியாளுக்குக் கட்டளையிட்டார்.

அடுத்த வினாடி மோட்டார் தயாராகிவிட்டது. சந்திராவை மெல்ல வண்டியிலேற்றிக் கொண்டு எஜமானனே அச்சுதனைக் கூட அழைத்துக்கொண்டு சந்திராவின் வீட்டை நோக்கிப் புறப்பட்டார். கார் வெகு வேகமாகச் சென்று அரைமணிக்குள்ளாகவே சந்திராவின் வீட்டுப்பின்புறம் தோட்டத்தின் முன்பே நிறுத்தப்பட்டது.

அச்சமயம் சந்திராவுக்குத் தானே இறங்கிச் செல்ல சக்தி வரவில்லையாதலால் அவளை மெல்ல இறக்கி அத்தோட்டத்துப் புறமாகவே வரும் சமயம் யாரோ ஒரு புருஷ உருவம் வேகமாக வந்து திடீரென ஒருவினாடியும் தாமதிக்காமல் அருகிலிருந்த கிணற் றில் விழுவதைக்கண்டு எல்லாரும் திடுக்கிடுன்றார்கள். சந்திரா தன்னிலை அழிந்தவளாய் அதோ! அதோ "என்னுடைய அப்பா கிணற்றில் விழுந்து விட்டார்!" என்று கத்தியவாறு அவர்களுடைய பிடியிலிருந்து திமிறிக்கொண்டு கிணற்றை நோக்கி ஆவேசம் கொண் டவள் போலத் தள்ளாடியவாறு ஓட ஆரம்பித்தாள்.

—

PRINTED AT TATA PRESS, & PUBLISHED BY V. M. PARTHASARATHY, MADRA

# புதிய சந்தா நேயர்களுக்கு

## அரிய சந்தர்ப்பம்.

சென்ற ஆண்டில் வெளியான மூன்று அதியர்புதமான நாவல்களைப் படித்தீர்களா ?

**பொங்கும் காதல்** அல்லது **மங்களபாரதி** — **பிச்சைக்காரக் குடும்பம்**

ஆனந்தஸாகர்

இல்லையேல், ரூ. **1-8-0** முன்பணமனுப்பி மிகவும் குறைந்த (சந்தா) விலையில் உடனே பெற்றுக் கொள்ளுங்கள். **சொற்ப காபிகளே கைவசமிருப்பதால் முந்துங்கள்.**

---

## "ஜகன்மோகினி" அன்பர்களுக்கு ஓர் நற்செய்தி

அரிய சந்தர்ப்பம்! — விசேஷ சலுகை !!

காலஞ்சென்ற பண்டித திரு. ராகவாசாரியார் இயற்றிய நூல்கள்

| | | ரூ. | அ. |
|---|---|---|---|
| 1. | துருவ வெண்பா | 0 | 8 |
| 2. | சம்பு ராமாயணம் | 0 | 10 |
| 3. | நீதி மஞ்சரி | 0 | 5 |
| 4. | திருமால் வெண்பா | 0 | 4 |
| 5. | சிவபிரான் துதி | 0 | 3 |
| 6. | ராஜராஜேசுவரி | 0 | 2 |
| | | 2 | 0 |

சந்தா செ. குறிப்பிட்டு ஆர்டர் செய்யும் அன்பர்களுக்கு மேற் கண்ட புத்தகங்களையெல்லாம் ஒரே காலத்தில் வாங்கினால் ரூ. 1-8-0க் குக்கொடுக்கப்படும். தனித்தனியாக வாங்குவதனால் தபால் செலவு இனம்.

வி. பி. கிடையாது. முன்பணம் தான் அனுப்பவேண்டும்.

விலாசம்:- ஜி. ஆர்.
C/o "ஜகன்மோகினி"
திருவல்லிக்கேணி.

---

# "லக்ஷ்மி"

## ஓர் உயரிய தமிழ் மாதப் பத்திரிகை.

எளிய நடையில் பல அரிய விஷயங்களுடன்

**மாதம் ஒரு முறை வெளிவரும்.**

பெண்களும், குழந்தைகளும், ஆவலுடன் வாசிக்கக் கூடிய சுவை பொருந்தியது.

உள் நாட்டுக்கு வருட சந்தா ரூ. 1 0 0
வெளி நாட்டுக்கு வருட சந்தா ரூ. 1 8 0

மானேஜர், **"லக்ஷ்மி" ஆபீஸ்,** திருநெல்வேலி ஜங்ஷன்.

# அம்ருத தாரா

அல்லது

# அதிசய சம்பவம்



வை.மு.கோதைநாயகி அம்மாள்.

சில வருஷங்களாக நமது கைவசமில்லாததால் நீங்கள் வெகு ஆவலுடன் எதிர்பார்த்திருந்த இரண்டு அற்புதமான துப்பறியும் நாவல்கள்.

ராதாமணி ரூ. 2-8. சந்தா நேயர்களுக்கு ரூ. 2.

காதலின் கனி ரூ. 2-8. சந்தா நேயர்களுக்கு ரூ. 2.

வெகு துரிதமாக அச்சாகிக்கொண்டு வருகின்றன.

ரூ. 3-8-0. முன் பணம் அனுப்புவோருக்கு இரண்டு நாவல்களும் தபால் செலவின்றி அனுப்பப்படும்.

## புதிய சந்தா நேயர்களுக்கு

அரிய சந்தர்ப்பம். | சஞ்சிகை விலை. | உடனே முந்துங்கள்.

தேச பக்தி ததும்பும் நாவல்கள்.

| | | ரூ. | அ. | பை. |
|---|---|---|---|---|
| ஸாரமதி | ... | 0 | 14 | 0 |
| நளினசேகரன் | ... | 0 | 4 | 0 |
| துப்பறியும் நாவல். | | | | |
| தியாகக் கொடி | ... | 1 | 2 | 0 |
| புத்தியே புதையல் | ... | 0 | 6 | 0 |
| மங்களபாரதி | ... | 1 | 0 | 0 |
| பிச்சைக்காரக் குடும்பம் | ... | 0 | 4 | 0 |
| ஆனந்தஸாகர் | ... | 0 | 4 | 0 |

சஞ்சிகைரூபமாக சொற்ப காபிகளே கைவசமுள்ளன.

"ஜகன்மோகினி" ஆபீஸ்

திருவல்லிக்கேணி.


Devi Press, Madras.

Jaganmohini (April 1936) Regd. No. M. 2210



தலை வலிக்கு

Headaches

ஆஸ்பிரினை விலக்குங்கள்

இருதயக் கோளாறுகளையும்

விலக்குங்கள்




அம்ருதாஞ்சனை

உபயோகியுங்கள்

அமிர்தாஞ்சன் டிபோ,

சென்னை கல்கத்தா பம்பாய்.